# பெரியார் அரசு கலைக் கல்லூரி
# கடலூர்
# தமிழ்த்துறை

## இளங்கலைத் தமிழிலக்கியம்
### முதலாம் ஆண்டு - முதற்பருவம்
### (2020-21)

## CTA 11 . இக்கால இலக்கியம்
### அலகு - 5, சிறுகதை (மண்மனக்கும் கதைகள்)
### பகுதி - 1

பாட ஆசிரியர்
**முனைவர் ஜா.இராஜா**
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
பெரியார் அரசு கலைக்கல்லூரி, கடலூர்

## ஆசிரியரைப் பற்றி

முனைவர் பா. சிங்காரவேலன் தேனி மாவட்டம் பெரியகுளத்தில் பிறந்தவர். அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் இளங்கலையும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முதுகலை மற்றும் ஆய்வியல் நிறைஞர் பட்டங்களும், காந்தி கிராம பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றுள்ளார்.

தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பத்து ஆண்டுகள் பணியாற்றியவர். டிசம்பர் 2007 முதல் அரசு கலைக் கல்லூரியில் பணியாற்றி வருகிறார். இடப்பெயர்ச்சிக் கதைகள், மானுடக்கவிகள், மனவெளித்தடம் கதைகள், மதுரைச்சீமை நாட்டுப்புறக் கலையும் கலைஞர்களும், திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் (பதிப்பாசிரியர்) என்ற வரிசையில் இந்நூலின் வழித் தொகுப்பாசிரியராகப் பரிணமித்துள்ளார்.

- பதிப்பகத்தார்.

சாரா பப்ளிசர்ஸ்
தெப்பக்குளம், திருச்சி - 620 002.
செல்: 9585243722

மண் மணக்கும் கதைகள் - தொகுப்பாசிரியர் முனைவர் பா. சிங்காரவேலன்

# மண் மணக்கும் கதைகள்

தொகுப்பாசிரியர்
முனைவர் பா. சிங்காரவேலன்



சாரா பப்ளிசர்ஸ், திருச்சி

# மண் மணக்கும் கதைகள்

தொகுப்பாசிரியர்

முனைவர் பா. சிங்காரவேலன்

சாரா பப்ளிசர்ஸ்
திருச்சி

Scanned with CamScanner

| | | |
|---|---|---|
| நூல் | : | மண் மணக்கும் கதைகள் |
| வகை | : | சிறுகதை |
| ஆசிரியர் | : | பா. சிங்காரவேலன் |
| பதிப்புரிமை | : | பதிப்பகத்தாருக்கே |
| முதற்பதிப்பு | : | அக்டோபர் 2017 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 11 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 105 + 16 |
| கட்டுமானம் | : | அட்டைக் கட்டுமானம் |
| வெளியீடு | : | சாரா பப்ளிசர்ஸ்<br>தெப்பக்குளம்,<br>திருச்சி - 620 002.<br>செல் : 9585243722. |
| விலை | : | ₹ 60 |



# அணிந்துரை

**முனைவர் ம. திருமலை,**
முன்னைத் துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

புதிய சமூகச் சூழ்நிலைகளில் தனிமனிதர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் புனைகதை இலக்கியத்தின் – குறிப்பாகச் சிறுகதை இலக்கிய வகையின் - கருப்பொருள்களாக ஆகின்றன. தனிமனிதர்களுள் கலைஞர்கள் புதிய சூழ்நிலைகளில் மிகுதியான நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். தொன்மை இலக்கியங்களில் கலைஞர்கள் தனிப் பிரிவாக இயக்கத் தொடங்கிய பின்னர், அவர்கள் சாதாரண மனிதர்களின் வாழ்வியலிலிருந்து வேறுபட்டனர். கூத்தர், பாணர், பொருநர், விறலி, புலவர் என்ற தனிப் பிரிவுகளாக இயங்கினர். இவர்களுள் சங்கப் புலவர்களுள் கிழார்களாகவும், புலவர்களாகவும் இருந்தவர்கள் வாழ்க்கையில் துன்புற்றது போலத் தெரியவில்லை. கலையையும் புலமையையும் தனித் தொழிலாகவும் வாழ்வாதாரமாகவும் கடைப்பிடித்தவர்கள் துன்புற்றதாகத் தெரிகிறது.

இன்றைய முழுநேரப் படைப்பாளிகள் போல, முழு நேரமும் புலமையைத் தொழிலாகக் கொண்டு ஒழுகியவர்கள் செல்வர்களாலும் மன்னர்களாலும் பராமரிக்கப்பட வேண்டியவர்களாக இருந்தார்கள். முறையான பராமரிப்பு மன்னர்களிடமிருந்தும், செல்வர்களிடமிருந்தும் கிடைக்காத போது அவலங்களும், முரண்பாடுகள் தோன்றின. நவீன காலத்தில் படைப்பாளிகளைப் பாதுகாத்து வாழ வைக்கும் பணியைப்



Scanned with CamScanner

பதிப்பகங்களும் வாசகர்களும் செய்கின்றனர். கலைஞர்கள், புலவர்கள் போன்றோர்க்கு இப்பாதுகாப்பு, அங்கீகாரம் போன்றவை கால மாற்றங்களினால் கிடைக்காமல் போவதுண்டு; அத்தகைய தருணங்களில் கலைஞனும், புலவனும் நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர். புரவலனுடன் தனிப்பட்ட முறையில் நேர் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் அவனை இடித்துரைக்கலாம்; வேறு ஒரு வள்ளலை நாடிச் சென்று பரிசில் பெறலாம். ஆனால் முதலாளித்துவச் சமூக அமைப்பில் புரவலன் தனிநபரல்ல; ஒரு சமூகம் தான் புரவலன் இடத்தில் அமைந்திருக்கிறது. எனவே கலைஞன் தனிநபரை விமரிசிக்க முடியாமல், இலக்கு இன்னதெனத் தெரியாமல் நிலைகுலைந்து அந்நியமாகின்றான். இத்தகைய அந்நியமாதல், நிலைகுலைவுகள் சிறுகதை, நாவல் இலக்கியங்களில் கருப்பொருள்களாக ஆகின்றன.

மேலூர் அரசுக் கல்லூரியில் தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரியும் முனைவர் பா. **சிங்காரவேலன்** **'மண் மணக்கும் கதைகள்'** என்ற தலைப்பில் கலைஞர்களின் இன்னல்களைச் சித்திரிக்கும் சிறுகதைகளைத் தேடித் தொகுத்து இந்நூலில் வழங்குகிறார். இத்தகைய ஒரு முயற்சியில் ஈடுபட்டதற்காக முனைவர் பா. சிங்காரவேலனை நான் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் தொன்னூறுகளில் முதுகலை பயின்றவர்; என் மாணவர்களுள் ஒருவர். அவர் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கிறார் என்பதை இந்நூலும், அவரது வேறு சில நூல்களும் வெளிப்படுத்துகின்றன; அதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி!!

**'மண் மணக்கும் கதைகள்'** என்ற தொகுப்பில் உள்ள சிறுகதைகள் பலவும் இன்றைய, மாறுபட்ட, நுகர்வுப் பண்பாடு கொண்ட சமூக அமைப்பில், கலைஞர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைச் சித்திரிப்பவை. ஒரு குறிப்பிட்ட யதார்த்தம் பற்றிப்



பல்வேறு படைப்பாளிகள் எவ்வாறு சிந்திக்கின்றனர் என்பதை இக்கதைகள் காட்டுகின்றன. இக்கதைகள் அனைத்துமே எதார்த்தவாதக் கதைகள் தாம். இதில் நாடகத்தனமான புனைவுகள் என்று எதனையும் ஒதுக்கி வைத்துவிட முடியவில்லை! ஓர் கலைகளின் நிலை புதிய சூழலில் எவ்வாறு இருக்கிறது என்பதையும் அதற்கான காரணம் இன்னதென்பதையும் இக்கதைகள் ஆராய்கின்றன. யதார்த்தம் என்பதே சமூகத்தின் இயக்கம், போக்கு குறித்த ஒரு வரலாற்றுப் பூர்வமான ஆய்வுதானே?

தமிழ்ச் சிறுகதையின் முதன்மையான ஆளுமையான **புதுமைப்பித்தனின் 'சிற்பியின் நரகம்'** ஓர் சிற்பியின் கனவு தகர்வதைச் சித்திரிக்கிறது. எந்தவொரு கலைஞனும் என்ன நோக்கத்திற்காகத் தனது படைப்பை உருவாக்குகிறானோ, அந்தக் குறிப்பிட்ட நோக்கம் சமூகத்தினால் புரிந்து கொள்ளப்படாத போது வெறுப்பில் மூழ்குகிறான். கலைஞனுக்குக் கிடைக்கிற பரிசுகளை விட, கலையின் சிறப்பை மற்றவர்கள் உணர்ந்து கொள்கிற பாங்கு தான் அதிக மகிழ்ச்சியை ஏற்படுத்தும். கலைஞனின் வாழ்க்கைக்கும் பொருள் தேவைதான்; எனினும் பொருளே அவனை மகிழ்ச்சிப்படுத்தி விடுவதில்லை. "வரிசையறிதல்" என்று சங்கப் புலவர்கள் இந்த மனநிலையைக் குறிக்கின்றனர். **'சிற்பியின் நரகம்'** சிறுகதை இக்கருத்தினைச் சிறந்த அமைப்பில் வைத்துப் பேசுகிறது. கதையின் முதற்பகுதியில் நாத்திகனான யவனன் பைலார்க்ஸ்ஸும் ஒரு சைவத் துறவியும் சந்தித்து கடவுளின் இருப்பு குறித்து விவாதிக்கின்றனர். மாபெரும் சிற்பியான சாத்தன் என்பவனை இருவரும் சந்திக்கின்றனர். சாத்தன் வடித்திருக்கிற நடராசர் சிற்பம் குறித்து விவாதிக்கின்றனர். சிற்பத்தின் அபூர்வ அழகினை "உன் சிருஷ்டி சக்தி" என்று பைலார்க்ஸ் பாராட்டுகின்றான். ஆனால் சாத்தன், "... பின்னாலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால் ... அதைச் சாதிக்க முடியுமா?" என்று கேட்டு எல்லாம் கடவுளின்



Scanned with CamScanner

அருள் என்று முடிக்கிறான். அந்தச் சிற்பம் அரசன் கட்டியுள்ள கோவிலுக்குப் போகிறது என்றவுடன் பைலார்க்ஸ் என்னும் நாத்திகன் கோபம் கொண்டு வெளியேறுகிறான். இவ்வளவு அழகிய சிற்பம் ரசிக்கப்படாமல் போகப் போகிறதே என்ற வருத்தம் அவனுக்கு! புதுமைப்பித்தன் தன்னை பைலார்க்ஸின் இடத்தில் வைத்திருக்கிறார்.

கோவில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டுச் சிலை கருவறையில் நிறுவப்படுகிறபோது, சாத்தன் ஏமாற்றமடைகிறான். வெளியில் நின்று தன்அழகினால் பலரையும் மகிழ்விக்க வேண்டிய சிலை கருவறைக்குள் இருட்டில் நிற்கிறது. பார்த்து மகிழ வேண்டியவர்கள், கண்களை மூடி, குனிந்து வணங்கிச் செல்கின்றனர். சாத்தன் ஏமாற்றத்தின் உச்சத்தில் நிற்கிறான். புதுமைப்பித்தன் இதனைச் சிறந்த நடையில், "இருட்டின் கரு போன்ற இடம். அதில் மங்கிய தீபவொளி தோன்றுகிறது. என்ன இதுவா பழைய சிலை! உயிரில்லை! கவர்ச்சிக்கும் புன்னகையில்லையே.. மருள்..! மருள்..! அந்தகார வாசலில் சாயைகள் போல் உருவாங்கள் குனிந்தபடி வருகின்றன. குனிந்தபடி வணங்குகின்றன" என்று சாத்தனின் மனநிலையைக் காட்டுகின்றார். கனவில் கண்ட இக்காட்சியினால் வெறுத்துப்போன சிற்பி சாத்தன் தான் அரும்பாடுபட்டு உருவாக்கிய கடவுள் சிற்பத்தை உடைத்து விடுவதாகக் கனவு காண்கிறான். ஒரு சிற்பியின் திறமை மதிக்கப்படாத போது ஏற்படும் விளைவை புதுமைப்பித்தன் மிக நுட்பமாக இக்கதையில் காட்டுகிறார். விமரிசன யதார்த்தவாதப் (critical realism) படைப்பு முறைக்கு "சிற்பியின் நரகம்" கதை சிறந்த சான்றாகும்.

கலை முறையாகப் புரிந்து கொள்ளப்படாத போது கலைஞன் தன் படைப்பினின்றும் அந்நியமாவதைப் புதுமைப்பித்தன் காட்டினார். கால மாற்றங்களின் விளைவாகச் கலைகள் சிதைந்து நிலை தாழ்ந்து போவதை இத்தொகுப்பில் உள்ள வேறு சில கதைகளும் காட்டுகின்றன. கோயில்



திருவிழாவில் அனுமார் வேடம் புனைந்து ஆடும் கலைஞன் ஒருவன் ஆதரவின்றித் தனிமையில் வீழ்வதை, அவனது இயலாமையை "பாய்ச்சல்" என்ற கதை காட்டுகிறது. கோவில் திருவிழாவில் மேள வாத்தியங்களின் முழக்கத்துடன் அனுமார் வேடமிட்டு ஆடும் கலைஞன் பிரமாண்டமான ஆகிருதியுடன் கண்டோர் உள்ளங்களில் பதிவாகிறான். ராமர், சீதை போன்ற தெய்வங்களை மறக்கடிக்கக் கூடிய அளவிற்கு அனுமாரைப் பார்வையாளர்கள் மனத்தில் பதியச் செய்த ஆட்டக்காரன், ஆட்டம் முடிந்த பிறகு சாதாரணமானவனாக ஆகிவிடுகின்றான். ஆட்டத்தை ரசித்துக் கொண்டே ஆட்டக்காரரின் பின்னால் சென்ற சிறுவன் அழகு என்பவர் அனுமார் ஆட்டக்காரனின் பரிதாபநிலை கண்டு இரங்குகிறான். "பஞ்சை எல்லாம் இழந்த சுகத்தில் அனுமார் கையையும் காலையும் உதறிக் கொண்டு, பீடியை எடுத்துப் பற்ற வைத்துப் புகையை நன்றாக இழுத்தார். கண்களை மூடி மேலே பார்த்தபடி புகையை ஊதுகையில் இருமல் வந்தது. விட்டு விட்டு இருமிக் காறி உமிழ்ந்தார். . . அசுர பலத்தோடு சாகசங்கள் புரிந்த அனுமார் பீடி அடித்துச் சோர்ந்து போய் இருக்கிறார். இவனுக்கு அழுகை வருவது போல் இருந்தது." பலரையும் மகிழ்விக்கும் கலையின் மறுபக்கம், கலைஞனின் யதார்த்த நிலை காணக்கூடிய ரசிக்கக் கூடிய தரத்தில் இல்லை என்பதை இக்கதையில் சா. கந்தசாமி காட்டுகிறார். இக்கதை, நிகழ்ச்சிகளை விரிவாகச் சித்திரித்து உள்ளடக்கத்தை வாசகனின் தீர்வுக்கே விட்டுவிடுகிறது. இது இயற்பண்பு வாதம் (Naturalism) என்ற இலக்கிய நெறியின் இயல்பு.

இயற்பண்பு வாத முறைப்படி, கலைஞனின் அவலநிலையை எடுத்துக்காட்டும் தலைசிறந்த பிறிதொரு கதைதான் அசோகமித்திரனின் 'புலிக்கலைஞன்' கதை. புலிவேடம் புனைந்து ஆடும் கலைஞனான காதர், பார்வையாளர்களை திகைப்பிலும் பயத்திலும் ஆழ்த்தும் சிறந்த கலைஞன். ஒரு திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்திற்கு வந்து புலிவேடம் புனைந்து



Scanned with CamScanner

ஆட, வாய்ப்புக் கேட்கிறான்; சிறு ஆட்டம் ஆடிக் காட்டுகிறான். அவன் ஆட்டம் மிகவும் அசலாக இருந்தது. "அவன் நான்கு கால்களையும் வைத்து ஆளுயரத்திற்கும் மேல் எகிறி, எங்கள் தலைக்குமேல் அந்த ஈரங்குலச் சுவர் விளிம்பில் ஒரு கணம் தன்னைப் பொருத்திக் கொண்டான்... மணடும் புலிபோல் கர்ஜித்தான். நாங்கள் திகிலடங்காத அதிர்ச்சியில் இருந்தோம். சிறுத்தை முகத்திலிருந்த (முகமூடி) அவன் கண்கள் புலிக் கண்களாக மின்னின. ... நாங்கள் எல்லோரும் பேச முடியாமல் இருந்தோம்" என்று காதரின் புலி வேட ஆட்டக் கலையின் சிறப்பை அசோகமித்திரன் கதைமாந்தரின் உணர்வு வெளிப்பாடாகக் காட்டுகிறார். தன் ஆட்டத் திறனால் ஒரு நிஜப் புலியையே கண்முன் காட்டிய காதர் தன் பசியையும் குடும்பத்தின் வறுமையையும் எண்ணி சினிமா வாய்ப்புக் கேட்டு குலுங்கிக் குலுங்கி அழுகிறான். நல்ல கலைஞனுக்கு வாழ வழியில்லை! புலிவேடக் கலைஞனுக்கு தன் திறமைகளைக் காட்ட வாய்ப்பில்லை! அழுவது காதர் மட்டுமல்ல; கதையை வாசிப்பவர்களும் தான்! சங்ககாலப் புலவர்களின் கண்ணீர் வேறு வடிவத்தில் இருபதாம் நூற்றாண்டிலும் தொடர்கிறது.

சினிமாவில் வாய்ப்புக் கேட்டு அழுத கலைஞனை அசோகமித்திரன் காட்டியது போல, நல்ல மரபுவழி இசை ஞானமுடைய ஒரு கலைஞன் தன் இசையை நம்பிப் பிழைக்க இயலாத போது, தெருவில் நாதஸ்வரத்தை வாசித்துப் பிழைக்கும் அவலத்தை நீல. பத்மநாபன் 'கலைஞன்' என்ற சிறுகதையில் சித்திரமாகத் தீட்டுகிறார். இத்தகைய உயர்ந்த இசையறிவை இவ்வாறு தெருவில் பரப்பி வைப்பது சரியா என்று கேட்ட ஒரு இசைப் பேராசிரியருக்குத் தெருக் கலைஞன் அளிக்கும் பதில் "எவ்வளவு நாள் கலை, கண்ணியம், அப்படி இப்படியெல்லாம் படுத்துகிட்டு ஊரிலேயே இருக்க முடியும்? வயிறுன்னு ஒண்ணு இருக்கே சார்... பேசாம இந்த நாதஸ்வரத்தை எடுத்துகிட்டு ஊரை விட்டுக் கிளம்பி விட்டேன்" – இது தோற்கடிக்கப்பட்ட கலைஞனின் குரல்!



பொதுவாகச் கலைஞர்களுள் அதிகமாகக் மதிக்கப்படாதவர்கள் இசைத்தட்டு நடனக்காரர்கள் (ரிக்கார்டு டான்ஸ்). இவர்களைப் பற்றி வண்ண நிலவன் எழுதிய கதை 'ஆடிய கால்கள்' என்பதாகும். இசைத்தட்டு நடன உலகத்தில் தனியாட்சி செய்து கோலோச்சியவன் சிதம்பரம். காலப்போக்கில் இசைத்தட்டு நடனங்கள் கோவில் திருவிழாக்களில் புறக்கணிக்கப்பட்டு, திரைப்படங்கள் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டதால் இக்கலைஞர்கள் ஆதரவின்றித் தனித்து விடப்பட்டனர். வயிற்றுப் பிழைப்பிற்காக ஒட்டல்களில் தண்ணீர் இறைத்தல், எச்சில் இலை எடுத்தல் முதலிய வேலைகள் செய்து நொறுங்கிப் போகிறார்கள். வறுமையின் உச்சமாக, ஒரு கப் தேனீருக்கும் இரண்டு இட்லிக்கும் ஆடுகிற நிலைக்கு வருகின்றனர். கலைஞன் சிதம்பரம் "எத்தன பாட்டுக்கு நான் ஆடியாச்சு? ஒரு டீ வாங்கிக் கொடுத்தீங்கன்னா கொஞ்சம் சொரத்தோட ஆடலாம்" என்று கேட்பது கலைஞர்களைப் புறக்கணித்த சமூகத்தின் முகத்தில் அறைவது போல இருக்கிறது.

மரபுவழிக் கலைகள், கலைஞர்களின் வீழ்ச்சியைச் சித்திரிக்கும் கதைகளுள் தலைசிறந்ததாக நான் கருதுவது சோ. தர்மன் எழுதிய "நிழல் பாவைகள்" என்ற சிறுகதை. தமிழ்நாட்டின் உட்புறக் கிராமங்களில் பாவைக்கூத்து கலைதான் மிகச் சிறந்த ஆகப் பிரபலமான கலைவடிவம். தோலினால் செய்யப்பட்ட உருவங்களில் கர்ணன், பீமன், தருமன், பாஞ்சாலி, கிருஷ்ணன் போன்ற இதிகாசக் கதைமாந்தர்களைத் தத்ரூபமாகப் படைத்துக் காட்டுபவன் இலட்சுமணராவ். கைவிரல்களின் நுனியில் இதிகாசக் கதைமாந்தர்களின் இயக்கங்களை நடத்தித் தன் பல்வேறுபட்ட குரலில் அவர்களை பாவைக் கூத்தில் உயிருடன் விட்டவன். லட்சுமணராவ் தன் மகன், மகள், மருமகள்களுடன் கிராமத்துக்கு வருகிறார். கிராமத்தின் முதியவர் முத்துவீரன் மட்டும் லட்சுமணராவை இனம் கண்டு வரவேற்கிறார். கால மாற்றத்தினால் கலைஞன் இலட்சுமண ராவ்



Scanned with CamScanner

ஊர் மக்களால் மறக்கப்பட்டுவிட்டான். பாவைக் கூத்துக் கலையின் அமைப்பும் உள்ளடக்கமும் மாறிவிட்டன. இப்போது தோல் பாவைகள் ஆடவில்லை. லட்சுமண ராவின் மகன், மகள்கள் ஆடுகின்றனர். "கொச்சைத்தனமான இரட்டை அர்த்த காமரசப் பாடல்களுக்கு கோபால் ராவும் அவனுடன் பிறந்த சகோதரிகளும் அரைகுறை ஆடைகளுடன் சேர்ந்து ஆடியதைப் பார்க்கச் சகிக்காதவராய் முத்துவீரன் தாத்தா வெளியே வந்தார்" என்று தர்மன் காட்டுகின்றார். கோபால் ராவ் இத்துடன் நிற்காமல் பார்வையாளர்களுள் விரும்புபவர்கள் மேடைக்கு வந்து பெண்களுடன் ஆடி மகிழலாம் என்ற அறிவிப்பைக் கூறுகிறான். கூடுதலாகக் கட்டணம் தந்து சில இளைஞர்கள் லட்சுமண ராவின் பெண்களுடன் ஆடுகின்ற அவலமும் நடந்தேறுகிறது. இதையெல்லாம் காணச் சகிக்காமல் முத்துவீரன் தாத்தா வெளியேறிச் செல்கிறார்.

எளிமையான கிராமியப் பண்பாடு சிதைந்து புதிய நகர நாகரிகத்தின் சாயல்கள் படிந்த பின் மரபு வழியான கலைகள் மதிப்பிழக்கின்றன. கலைஞர்கள் துன்பத்தில் ஆழ்கின்றனர். தங்களின் இருத்தலுக்கான போராட்டத்தில் தங்களது அரிய பெருமைகளை இழந்து கீழான செயல்களில் ஈடுபடவும் துணிகின்றனர். ஏனென்றால் பாரம்பரியம் குறித்த பெருமையைவிட, பசி மிகுதியான ஆற்றலுடையது! இந்த அவல நிலையைச் சிறப்பான யதார்த்தப் பார்வையுடன் சோ. தர்மன் ஆய்வு செய்திருக்கிறார் என்றே கூறலாம். என் இதயத்தைக் கசக்கிப் பிழிந்த சிறுகதை இது. இதைப் படித்த பின் லட்சுமண ராவின் சோகத்தில் நான் அதிர்ச்சியுடன் மூழ்கினேன். மலையாள நாவலாசிரியாரான ஜோசப் முண்டசேரியின் "பேராசிரியர்" நாவலைப் படித்த பின் இரண்டு மூன்று நாட்கள் நான் தூக்கமிழந்து, நள்ளிரவுகளில் சோழவந்தான் கிராமத்தின் தெருக்களிலும் வைகையாற்றின் மணற்பரப்பிலும் தனியாக நடந்து திரிந்தேன். சோ. தர்மனின் இச்சிறுகதையும் என்னைத் தூக்கமிழக்கச் செய்தது.



கோணங்கியின் 'மதுரைக்கு வந்த ஒப்பனைக்காரன்' சிறுகதையும் இதே முறையில் அமைப்பில் அமைந்தது. மரபான நாடகம், கூத்து முதலான கலைகள் மதிப்பிழந்த காலத்தில், ஒப்பனைகள் செய்து வந்த கலைஞன் தேவையற்றவனாகி விடுகிறான். பிழைப்பிற்காக ஒப்பனைப் பொருட்களைத் தெருவில் பரப்பி விலை கூறி விற்கிறான். "அதிசயங்கள் எல்லாம் ஏலத்தில் விடுகிறேன். எதை வேண்டுமானாலும் கேளுங்கள். துணி பொம்மையை எடுத்து ஆட்டுகிறான். இதோ அரிமர்த்தன பாண்டியன் எனக்களித்த முத்துமாலை. வைரம் பதித்த கிரீடங்கள், கோவலன் கொண்டு வந்த சிலம்பு..." என்று அனைத்தையும் விலை கூறுகிறான். இவை வெறும் பொருட்கள் மட்டுமல்ல; சாதாரண மனிதர்களை வரலாற்று மனிதர்களாக மாற்றிக் காட்டியவை. மாலை நேரம் முழுவதும் விற்பனை செய்த ஒப்பனைக் கலைஞன் எஞ்சிய பொருட்களுடன் வீடு திரும்புகிறான். அக்காட்சியைக் கனவுத் தன்மை பொருந்திய மொழிநடையில் கோணங்கி கூறும்போது ஒப்பனைக் கலைஞனின் வறுமை உயிர்பெற்று நம்மை மிரட்டுகிறது. விதை நெல்லைச் சமைத்து உண்பதைப் போன்ற அவலம்.

பவா செல்லத்துரையின் 'ஏழுமலை ஜமா' என்ற சிறுகதையும் இதே முறையில் ஒரு கலைஞனின் வீழ்ச்சியைக் கூறுகிறது. நாட்டுப்புறக் கலைகள், ஆட்டங்கள் வேர்பிடித்திருந்த கிராமத்து மண்ணில் திரைப்படம் என்ற களை நுழைந்து கலைப் பயிர்களை அழித்தது. "கரும்பு வெட்ட, சூளை போட, ரிக்ஷா ஓட்டவென்று தர்மரையும் பீமனையும் பாஞ்சாலியையும் வாழ்க்கை பிரித்தனுப்பியது" என்று இந்த அழிவுநிலையைப் பவா செல்லத்துரை காட்டுகிறார். ஏழுமலை புதிய வாழ்க்கையை ஏற்கவும் முடியாமல், பழைய வாழ்க்கையினை விடவும் முடியாமல் உழல்கிறான்.

பழகிய தடத்திலேயே நடை பயின்று, சிந்திக்கவும் தெரியாமல் சிறிய விஷயங்களுக்காகக் கூட, சிலிர்த்து எழுந்து சண்டையிட்டு மடியும் கிராமிய மனப்பாங்கை தூமா. வாஸகி

காட்டுகிறார். காவடிகள் பற்றிய நுட்பத் தகவல்கள் இக்கதையில் உண்டு. காவடிகள் கோவிலுக்குள் நுழைய கிருஷ்ணப் பருந்து வானில் பறக்க வேண்டும்; அதைப் பார்த்த பின்னர் தான் கோவிலுக்குள் நுழைய வேண்டும் என்ற பிடிவாதம். கடைசிச் சண்டை நடந்து, எல்லாம் முடிந்தபின் வானில் கிருஷ்ணப் பருந்து தோன்றுகிறது. ஒரு தேர்ந்த கலைஞன் தன் கண்முன்னே நடக்கும் நிகழ்வுகளை விவரிப்பதன் மூலமாகவே ஒரு எள்ளலை முன்வைத்து விடுவான்! இது அத்தகைய விமர்சன யதார்த்தவாதம் பொருந்திய கதைதான் "காவடியாட்டம்." இத்தலைப்பில் கூட ஓர் எள் முனையளவு இடைவெளியில் கிண்டர் தொனி தொக்கி நிற்பதாகத் தோன்றுகிறது. கிருஷ்ணப் பருந்து வானில் தோன்றியது எதற்காகவோ என்று இறுதியில் வைக்கப்படும் வினா முக்கியமானது. மேலே விவரிக்கப்பட்ட கதைகள் அனைத்தும் விமரிசன யதார்த்தவாத நெறியில் அமைந்தவை. கா. சிவத்தம்பி அவர்கள் இத்தகைய செய்திகளை விவாதிக்க இந்த அணுகுமுறை உகந்தது என்று ஓரிடத்தில் கூறுவதையும் எண்ணிப் பார்க்கலாம்.

கிருஷ்ணப் பருந்து பற்றிய நம்பிக்கையை யூமா வாஸுகி கிண்டல் செய்வதைப் போல, நம்பிக்கையைத் தூக்கிப் பிடிப்பது நா. இளங்கோவின் "மெய்வருத்தம்" என்ற சிறுகதை.

எஸ். கண்ணன் என்பவர் எழுதிய 'ஜல்லிக்கட்டு' என்ற சிறுகதையும் இன்றைய காலச் சூழலைப் பிரதிபலிக்கும் சிறுகதையாகும். ஜல்லிக்கட்டில் தோற்ற காளையை அடிமாட்டுக்காக விற்கும் தந்தை இராமசாமித் தேவரைக் கண்டித்து, அதனை விற்கவிடாமல் தடுக்கும் மகன் தங்கசாமி புதிய யுகத்தின் இளைஞன். ஜல்லிக்கட்டில் பாய்வதற்காக மட்டும் உள்ளவையல்ல, ஜல்லிக்கட்டுக் காளைகள்; அதற்கு வேறு விரிவான பயன்கள் உண்டு என்பதை உணர்த்த இளைய தலைமுறை மனிதன் தங்கசாமி.



நா. கண்ணன் என்பவர் படைத்துள்ள 'ஜல்லிக்கட்டு' என்ற இன்னொரு கதை சுதேசி மரபுகளை மீட்டெடுக்கும் போராட்டத்தின் பின்னணியில் உள்ள தேவைகளைக் கூறுகிறது.

'கூத்தாடிகள்' என்ற சிறுகதையில் சு. தமிழ்ச்செல்வி நாட்டுப்புற ஆட்டக் கலைஞர்களின் வாழ்வியலை உள்ளவாறே பதிவு செய்திருக்கிறார். ஆட்டத்திலும், உணவு வகைகளை நுகர்வதிலும் அமைந்த மகிழ்ச்சி கொள்ளும் நாட்டுப்புறக் கலைஞர்கள் பற்றிய பதிவாக இக்கதை அமைகின்றது.

மண் மணக்கும் கதைகள் என்ற இத்தொகுப்பு மிக முக்கியமானதாக இன்றைய சூழலில் அமைகிறது. ஒரு சமூகத்தின் உற்பத்தி உறவுகளின் உடன் விளைவான கலைகளும் கலைஞர்களும் மாறுபட்ட சமூக அமைப்பில் எங்ஙனம் சிதைவடைகின்றனர் என்பதை இக்கதைகள் காட்டுகின்றன. கோடிக்கணக்கில் பணம் புரளும் கலைகளைப் பாதுகாக்கும் சமூகம், ரசிகர் மன்றங்கள் அமைத்து வழிபாடுகளை மேற்கொள்ளும் சமூகம் நொறுங்கிப் போன சக கலைஞனை மனிதனைக் குறித்து சிந்திக்க நேரமில்லாமல் ஓடிக் கொண்டிருப்பது வாசகர் மனத்தைத் துன்புறுத்துகிறது. இந்தத் துன்ப உணர்வை இக்கதைகள் பிரதிபலிக்கின்றன.

இத்தகையதொரு பொருள் பற்றிய சிறுகதைகளைத் தேடித் தொகுத்திருக்கும் முனைவர் பா. சிங்காரவேலன் பாராட்டிற்குரியவர். இக்கதைகள் எங்கோ ஒரு மூலையில் யாரோ ஒரு வாசகனின் உள்ளத்தில் நுழைந்து அவனை வதைக்கும் என்பதில் ஐயமில்லை. இலக்கியத்தின் பணியே இதயத்தில் நுழைந்து தங்குவது தானே!

வாழ்த்துக்கள்

*மதுரை-16*
*23.9.17*

அன்புடன்
ம. திருமலை



Scanned with CamScanner

# என்னுரை

ஆயக்கலைகள் அறுபத்து நான்கு. அதில் மனிதனின் தன் மன உணர்வுகளை, அழகியல் சிந்தனைகளை, இசையாக, கூத்தாக, நாடகமாக, சிற்பமாக, ஓவியமாக வெளிப்படுத்தினான். கலைகள் மக்கள் வாழும் சூழலுக்கு ஏற்ப உருவாகின. கலைகள் மக்களைக் களிப்படையச் செய்தன. அதன் வழி மனிதனின் மன இறுக்கம் தளர்ந்தது. நம்பிக்கையின் அடிப்படையில் உருவான கலைகள் காலப்போக்கில் பொழுதுபோக்குக் கலைகளாக மாறின. இன்று ஊடகங்களின் வருகையினால், வளர்ச்சியினால் நாட்டுப்புறக் கலைகளைக் கண்டு ரசிப்பவர்களின் எண்ணிக்கை குறைந்தது. இதனால் கலைஞர்கள் பலரும் தம் தொழில் வாய்ப்பை இழந்தனர். கலைகளை நிகழ்த்துபவர்கள் வேறு தொழில் செய்து பிழைக்கத் தொடங்கினர். பிற தொழிலை அறியாத மூத்த கலைஞர்கள் தம் வாழ்வாதாரத்தைக் கருத்தில் கொண்டு புதிய உத்திகளைக் கையாண்டு வித்தைகள் செய்து பிழைத்து வருவதைக் கள ஆய்வில் காணமுடிகிறது.

இத்தகைய கலைஞர்கள் செவ்வியல் கலைஞர்களுக்குரிய அங்கீகாரம் தங்களுக்கு இல்லை பட்டமும் பதவியும் பிழைப்பூதியமும் கிடைப்பதில்லை என்ற வருத்தம் நிறைந்தவர்களாக உள்ளனர். நாட்டுப்புற இசையும் நடனமும் பாடலும் ஆடாத கால்களையும் ஆட வைக்கும். பாடாத வாயையும் பாட வைக்கும்.

இன்றைக்கு அழிந்துவரும் நாட்டுப்புறக் கலைகளையும் கலைஞர்களின் வாழ்க்கைப் போராட்டத்தைக் கண்ணுற்ற சிறுகதைப் படைப்பாளர்கள் எளிமையான முறையில் மனித நேயத்தோடு கலைஞர்கள் வாழ்வை சிறுகதைகளில் பதிவுசெய்துள்ளனர். இக்கதைகளைத் தொகுப்பதன் மூலம்



கலையினையும் கலைஞர்களின் வாழ்வையும் வாசகர்கள் என்ற பரந்த சமூகம் அறிந்துகொள்ள இயலும் என்பதால் அத்தகைய சிறுகதைகளைத் தொகுத்துள்ளேன். **'மண் மணக்கும் கதைகள்'** என்ற இந்நூலுக்கு அணிந்துரை நல்கிய எங்கள் பெருமைக்குரிய பேராசிரியர் **தஞ்சைப் பல்கலைக்கழக முன்னைத் துணைவேந்தா முனைவர் ம. திருமலை அய்யா** அவர்களுக்கும், **'மண் மணக்கும் கதைகள்'** வெளிவர வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டிய என் அன்பு நண்பர் **மேலூர் அரசுகலைக் கல்லூரி தமிழ்த்துறை** உதவிப்பேராசிரியர் முனைவர் செ. எபநேசர் அவர்களுக்கும், **அமெரிக்கன் கல்லூரி தமிழ் உதவிப் பேராசிரியர் முனைவர் ஆ. பூமிச்செல்வம்** அவர்களுக்கும், கல்வி ஒன்றே காலத்தால் நிலைத்து நிற்கச் செய்யும் என்ற எண்ணத்தை மனதில் விதைத்த என் அம்மா திருமதி **அனுசுயா பாலசுப்பிரமணியன்** அவர்களுக்கும், என் எழுத்துப் பணிக்கு உரமூட்டிய என் வாழ்க்கைத் துணைவி இரா. **வேணிப்ரியா** அவர்களுக்கும், அன்பு மகள் சி. சிந்துவுக்கும், நூலாக்கம் செய்த ***சாரா பப்ளிசர்ஸிற்கும்,*** சிறுகதைப் பிரதிகளைத் தட்டச்சு செய்து தந்த மீனாடேனியல் அவர்களுக்கும், என் நெஞ்சம் நிறைந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

மதுரை
24.09.17

இப்படிக்கு



Scanned with CamScanner

## உள்ளே . . .


| | | பக்க எண் |
|---|---|---|
| 1. | சிற்பியின் நரகம் - புதுமைப்பித்தன் | 1 |
| 2. | செய்தி - தி. ஜானகிராமன் | 10 |
| 3. | நாயனம் - ஆ. மாதவன் | 22 |
| 4. | பாய்ச்சல் - சா. கந்தசாமி | 32 |
| 5. | புலிக்கலைஞன் - அசோகமித்திரன் | 44 |
| 6. | கலைஞன் - நீலபத்மநாபன் | 55 |
| 7. | ஆடிய கால்கள் - வண்ணநிலவன் | 62 |
| 8. | காவடியாட்டம் - பூமா. வாஸவி | 70 |
| 9. | நிழல் பாவைகள் - சோ. தர்மன் | 80 |
| 10. | மதுரைக்கு வந்த ஒப்பனைக்காரன் - கோணங்கி | 91 |




# சிற்பியின் நரகம்

புதுமைப்பித்தன்

சூரியாஸ்தமன சமயம் காவிரிப்பூம்பட்டினத் துறைமுகத்தில் என்றையும் விட அதிக நெருக்கடி. கறுத்து ஒடுங்கிய மிசிர தேச வாசிகளும், வெளுத்து ஒதுங்கிய கடாரவாசிகளும், தசை வலிமையின் இலட்சியம் போன்ற கறுத்த காப்பிரிகளும், வெளுத்த யவனர்களும், தென்னாட்டுத் தமிழும், வடநாட்டுப் பிராகிருதமும் – எல்லாம் ஒன்றிற்கொன்று முரண்பட்டுக் குழம்பின சுங்க உத்தியோகஸ்தர்கள் அன்னம் போலும், முதலைகள் போலும் மிதக்கும் நாவாய்களிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பண்டங்களையும், வேலைக்காரர்களையும் பொற் பிரம்பின் சமயோசிதப் பிரயோகத்தால் தணிக்கை செய்து கொண்டிருந்தனர். அரசனுக்குக் கடாரத்திலிருந்து வெள்ளை யானைகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பார்க்கத்தான் என்றுமில்லாத கூட்டம்!

அஸ்தமன சூரியனின் ஒளியே எப்பொழுதும் ஒரு சோக நாடகம். கோவில் சிகரங்களிலும், மாளிகைக் கலசங்களிலும் தாக்கிக் கண்களைப் பறிப்பது மட்டுமல்லாது, கடற்கரையில் கரும்பாறையில் நிற்கும் துவஜஸ்தம்பத்தின் மீது கீழ்த்திசை நோக்கிப் பாயும் பாவனையில் அமைக்கப்பட்ட பொன் முலாம் பூசிய வெண்கலப் புலியின் முதுகிலும் வாலிலும் பிரதிபலிப்பது அவ்விடத்திற்கே ஒரு மயக்கத்தைக் கொடுத்தது.

இந்திர விழாவின் சமயத்தில் மக்களின் வசதிக்காக அமைக்கப்பட்ட ஸ்நான கட்டத்தின் படிக்கட்டில், பைலார்க்கஸ்



Scanned with CamScanner

என்ற யவனன் கடலை நோக்கியபடி உட்கார்ந்திருந்தான். நீண்ட போர்வையான அவனது டோக்கா காற்றில் அசைந்து படபடவென்றடித்து, சில சமயம் அவனது தாடியையும் கழுத்துடன் இறுகப் பின்னியது. பெரிய அலைகள் சமயா சமயங்களில் அவனது பின்னிய தோல் வார்ப் பாதரட்சையை நனைத்தன. அவ்வளவிற்கும் அவன் தேகத்தில் சிறிதாவது சலனம் கிடையாது. மனம் ஒன்றில் லயித்துவிட்டால் காற்றுத்தான் என்ன செய்ய முடியும்? அலைதான் என்ன செய்ய முடியும்?

பைகார்க்களின் சிந்தனை சில சமயம் அலைகளைப் போல் குவிந்து விழுந்து சிதறின. கனவுகள் அவனை வெறியனைப் போல் விழிக்கச் செய்தன. திடீரென்று, "சிவா!" என்ற குரல் ஒரு தமிழ்நாட்டுப் பரதேசி! "யவனரே! உமது சித்தம் உமக்குப் பிரியமான ஒன்றுமற்ற பாழ் வெளியில் லயித்ததோ? நான் நேற்றுச் சொன்னது உமக்குப் பதிந்ததா? எல்லாம் மூல சக்தியின் திருவிளையாடல். அதன் உருவம்! கொல்லிப் பாவையும் அதுதான்; குமரக் கடவுளும் அதுதான்! எல்லாம் ஒன்றில் லயித்தால்...?"

"உமது தத்துவத்திற்குப் பதில் ஒரு கிண்ணம் திராட்ச மது எவ்வளவோ மேலானது. அதுவும் சைப்பிரஸ் தீவின் திராட்சை. அதோ போகிறானே, அந்தக் காப்பிரியும் ஏதோ கனவை நம்புகிறான். உமது முதல் சூத்திரத்தை ஒப்புக்கொண்டால், உமது கட்டுக்கோப்பில் தவறு கிடையாதுதான்... அதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? ஒவ்வொருவனுடைய மனப் பிராந்திக்கும் தகுந்தபடி தத்துவம்... எனக்கு அது வேண்டாம்... நாளங்காடியில் திரியும் உங்கள் கருநாடிய நங்கையும், மதுக்கிண்ணமும் போதும்..."

"சிவ! சிவ! இந்த ஜைனப் பிசாசுகள் கூடத் தேவலை, கபாலி வெறியர்கள் கூடத் தேவலை. உம்மை யார் இந்த அசட்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு யவனத்திலிருந்து வரச் சொன்னது?"





"உம்மைப் போன்றவர்கள் இருக்குமிடத்தில் நான் இருந்தால்தான் அர்த்தமுண்டு. எங்கள் ஜூபிட்டரின் அசட்டுத்தனத்திற்கும் உங்கள் கந்தனின் அசட்டுத்தனத்திற்கும் ஏற்றத் தாழ்வில்லை..." என்று சிரித்தான் பைலார்க்கஸ்.

"சிவ! உம்மிடம் பாசத்தை வைத்தான். அதுவும் அவன் விளையாட்டுத்தான்!" என்று தம் சம்புடத்திலிருந்த விபூதியை நெற்றியில் துலாம்பரமாக அணிந்துகொண்டார் பரதேசி.

"நாளங்காடிப் பக்கம் போகிறேன். வருகிறீரா?" என்றார் மீண்டும் அச்சந்நியாசி.

"ஆமாம்! அங்கே போனாலும் சாத்தனைப் பார்க்கலாம். அவனிடம் பேசுவதில் அர்த்தமுண்டு... அவனுக்குத் தெரியும் சிருஷ்டி ரகசியம்..."

"ஓஹோ! அந்தச் சிலை செய்கிற கிழவனையா? உமக்கு ஏற்ற பைத்தியக்காரன்தான்... ஏதேது! அவனே அதோ வருகிறானே!" என்றார் சாமியார். பைலார்க்கஸ் எழுந்து அவனை யவன முறையில் வணங்கினான். சாத்தனுக்கு எண்பது வயதிருக்கும்; தொண்டு கிழவன். ஆனால் வலிமை குன்றவில்லை; கண்களின் தீட்சண்யம் போகவில்லை. பிரமன் மனித வடிவம் பெற்றது போல் காணப்பட்டான். அவனும் கைகூப்பி வணங்கி, "பைலார்க்கஸ், உன்னைத்தான் தேடிவந்தேன்! வீட்டிற்கு வருகிறாயா? எனது லட்சியம் இன்றுதான் வடிவம் பெற்றது...! என்று ஒரு குழந்தையின் உற்சாகத்துடன் கூவியழைத்தான். இவரைத் தெரியுமா? பாண்டிய நாட்டு, உங்கள் பரதேசி... அவர் தத்துவங்களை எல்லாம் என்னுள் திணித்துப் பார்த்தார்... பைலார்க்களிடம் முடியுமா?" என்று கேலியாகச் சிரித்தான் யவனன்.

"சுவாமி வரணும், இன்று என் குடிசையில் அமுது படி கழிக்க வேண்டும்" என்று பரதேசியைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தான் சாத்தான்.



Scanned with CamScanner

"என்ன, என்ன! நீயுமா?" என்றான் பைலார்க்கஸ்.

"பைலார்க்கஸ்! நீ நிரீசுவரவாதியாக இருப்பதில் எனக்கு வருத்தமில்லை.

மற்றவரைக் கேலி செய்யாதே..."

"அதற்குத்தான் நான் பிறந்திருக்கிறேன் அப்பா! எனது வேலை அது..."

"சரி, வாருங்கள் போகலாம். சுவாமி வரணும்!" என்று இருவரையும் இரட்டை மாட்டு வண்டிக்கு அழைத்துச் சென்றான் சிற்பி.

வண்டியின் கதி மெதுவாகத்தான் இருக்க முடிந்தது. எதிரே யானைகளும், பாதி கழுதை, பொதி மாடுகளும், துறைமுகத்தை நோக்கிவரும் நேரத்தில் தீப்பந்தம் பிடித்துச் செல்லும் மக்களை விலக்கிக் கொண்டு வண்டி செல்வது கடினந்தான். திடீரென்று அரசாங்க உத்தியோகஸ்தர்களின் ரதம். யானை வந்துவிட்டால் தெருவே தூளிபடும். முரசொலி இருந்து என்ன பயன்? அந்த உப்புவண்டி ஓட்டிச்செல்லும் பெண் சிறிது தவறினால் ரத்தத்தின் அடியில்தான்! சாத்தனின் வண்டி அதில் முட்டிக்கொள்ளவிருந்தது.

"ஜூபிட்டர் யவன இதிகாசங்களில் குறிப்பிடப்படும் தேவர்களுக்கு அரசன்; கிரகங்களில் வியாழன்".

"தெய்வச்செயல்!" என்றான் சாத்தான்.

"உன் சிருஷ்டி சக்தி" என்றான் பைலார்க்கஸ். வேறு எதையோ நினைத்துக்கொண்டு.

"பைலார்க்கஸ், உனது பேச்சு எனது பெருமையைச் சாந்தி செய்யலாம். நான் எத்தனை நாள் கஷ்டப்பட்டேன்! அது உனக்குத் தெரியுமா? நீ நேற்றுப் பிறந்தவன்... கூத்து!... அதில்





எவ்வளவு அர்த்தம்? மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம், தெரியவேண்டுவதெல்லாம்... இந்தப் பிரபஞ்சமே, பைலார்க்கஸ், நீ நினைப்பது போல் வெறும் பாழ் வெளியன்று அர்த்தமற்ற பேய்க் குழப்பம் அன்று... இருபது வயசிருக்கும்; அப்போ ஒரு தரம் பாண்டிய நாட்டுக்குப் போயிருந்தேன். சிற்பத்தைப் பார்க்க வேண்டுமானால் கொல்லிப்பாவையைப் பார்க்க வேண்டும். அங்கேதான், ஒரு மறவன், நாகன், ஒரு கூத்தில் அபிநயம் பிடித்தான். அந்தக் கால் வளைவு, அதை அதிலே பிடித்தேன்... உலகத்தின் அர்த்தத்தை ... ஒவ்வொன்றாக, படிப்படியாக வளர்ந்தது... அந்த மலையத்து நடிகைதான் முகத்தின் சாந்தியை, அந்த அபூர்வமான புன்சிரிப்பை, அர்த்தமற்ற அர்த்தத்தை – பைலார்க்கஸ், உனக்கென்ன! நீ கேலிக்காரன் – உபநிஷத்தில் தேடியலைந்தேன்... ஹிமயத்தில் தேடியலைந்தேன்... சாந்தி அந்த இரவு ... என் மனைவி அங்கயற்கண்ணி இறந்த அன்று கிட்டியது. பிறகு வெண்கலக் கலப்பிற்கு என்ன பரீட்சை! என்ன ஏமாற்றம்!... ஆசைதான் வழிகாட்டியது. அந்த ரூப சௌந்தரியம் பெறுவதற்கு எத்தனை ஆட்களைத் தேடினேன்!... அதன் ஒரு சாயை... நீலமலைக் கொடுங்கோலன் – பத்து வருஷங்களுக்கு முன்பு சிரச்சேதம் செய்யப்பட்டானே – அவனுடைய இடை துவளுதலில் கண்டேன். தெய்வம் ஒன்று உண்டு... அதன் அர்த்தத்தை என் சிலை உணர்த்த முடிந்தது எனது பூர்வ ஜன்மப் பலன்... இந்தக் கைகளால் ... பின்னாலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால் ... அதைச் சாதிக்க முடியும்?"

"நீதான் சாதித்தாய்! நீதான் பிரம்மா! உன் சாதனைதான் அது. சிருஷ்டி! மயங்காதே! பயப்படாதே! நீதான் பிரம்மா! சிருஷ்டித் தெய்வம்!" என்று பைலார்க்கஸ் அடுக்கிக்கொண்டே போனான்.

சாமியார் புன்சிரிப்புடன் வெளியே எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தார். வண்டியும் நாளங்காடியை அடைந்து, கீழ்ச் சதுக்கத்தின் வழியாக ஒரு சந்தில் திரும்பி, ஒரு வீட்டின் முன்பு நின்றது.



Scanned with CamScanner

மூவரும் இறங்கி வாசற்படியில் ஏறினர். ஒரு யவனப் பெண் வந்து காலைக் கழுவினாள். ஒரு காப்பிரி, மரியாதையாகக் குனிந்து, கலிங்க வஸ்திரத்தினால் துடைத்தான்.

"சுவாமி வரவேண்டும்! பைலார்க்கஸ், இப்படி வா!" என்று இருவரையும் அழைத்துக்கொண்டு ஓர் அறைக்குள் சென்றான் சாத்தான்... அவன் வயதிற்கு அவ்வளவு துடிதுடிப்பு ஆச்சரியமானதுதான்!

"மூபாங்கோ, தீபம்!" என்று கத்தினான். அந்தக் காப்பிரி ஒரு கைவிளக்கை எடுத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். ஜன்னல் இல்லாத அந்த அறையிலும் காற்று நூலிழை போல் வந்து உள்ளத்தையும் உடலையும் மயக்கியது.

"இங்கு கூடவா விளக்கு இல்லை! திரையை ஒதுக்கு! ஸ்வாமி, பைலார்க்கஸ், இதுதான் என் வாழ்க்கை!" என்று திரையை ஒதுக்கினான்.

இருவரும் ஸ்தம்பித்து நின்றனர். அந்த மங்கிய தீபஒளியில், ஒற்றைக் காலைத் தூக்கி நடிக்கும் பாவனையில், ஆள் உயரத்தில் மனித விக்கிரகம்! விரிந்த சடையும் அதன்மீது விளங்கும் பிறையும், விரிந்து சின்முத்திரைகளைக் காணப்பிக்கும் கைகளும், அந்த அதரத்தில் தோன்றிய அபூர்வப் புன்னகையும் மனத்தில் அலைமேல் அலையாகச் சிந்தனைக் கற்பனைகளைக் கிளப்பின. மூவரும் அந்தச் சிலையேயாயினர். சிலையின் ஒவ்வொரு வளைவிலும், ஒவ்வொரு அங்கத்திலும் என்ன ஜீவத் துடிதுடிப்பு!

சந்நியாசி, தம்மையறியாமல் பாட ஆரம்பித்தார்.

**குனித்த புருவமும், கொவ்வைச்**
**செவ்வாயும், குமின் சிரிப்பும்,**
**பனித்த சடையும் பவளம்போல்**





**மேனியும், பால் வெண்ணீறும்,**
**இனித்தமுடைய எடுத்த பொற்**
**பாதமும் காணப் பெற்றால்**
**மனித்தப் பிறவியும் வேண்டுவதே**
**இந்த மா நிலத்தே!**

"சுவாமி, அப்படி சொல்லக் கூடாது!"

"சாத்தா! அவர் சொல்லுவதுதான் சரி! இது கலையா! இது சிருஷ்டி! இதை என்ன செய்யப் போகிறாய்?"

"அரசன் கோவிலுக்கு... இதென்ன கேள்வி?"

"என்ன! இந்த அசட்டுத்தனத்தை விட்டுத்தள்ளு... அரசனுடைய அந்தப்புர நிர்வாண உருவங்களின் பக்கலில் இதை வைத்தாலும் அர்த்தம் உண்டு... இதை உடைத்துக் குன்றின்மேல் எறிந்தாலும் அந்தத் துண்டுகளுக்கு அர்த்தம் உண்டு; ஜீவன் உண்டு..." என்று வெறி பிடித்தவன் போல் பேசினான் பைலார்க்கஸ். "சீ பைலார்க்கஸ்! உனது வெறிபிடித்த கொள்கைகளுக்கு யவனத்தான் சரி! அகஸ்தூஸா – அந்த உங்கள் சாம்ராட் – அவனுக்குத்தான் சரி உன் பேத்தல்!" "சாத்தனாலே! உமது இலட்சியத்திற்கு அரசன் கோரிக்கைதான் சரியான முடிவு. இனி ஏன் இந்த ஜைனர்கள் தலைதூக்கப் போகிறார்கள்...!" என்றார் சாமியார். "இந்த வெறிபிடித்த மனிதர்களைவிட, அந்தக் கடலுக்கு எவ்வளவோ புத்தியிருக்கிறது..." என்று கோபித்துக்கொண்டு பைலார்க்கஸ் வெளியேறிவிட்டான்.

அன்றுதான் கும்பாபிஷேகம். சிலையைப் பிரதிஷ்டை செய்த தினம் சோழ தேசத்திலேயே அது ஒரு பெரும் களியாட்டம் என்று கூற வேண்டும். சாத்தானுக்கு இலட்சியம் நிறைவேறிற்று. அன்று பைலார்க்கஸ் தனது குதூகலத்தில் பங்கெடுத்துக்கொள்ள உயிருடன் இல்லையே என்ற வருத்தம் சாத்தானுக்கு அதிகம்.



Scanned with CamScanner

புதிய கோவிலிலிருந்து வீடு சேரும்பொழுது அர்த்த ஜாமமாகிவிட்டது. வயதின் முதிர்ச்சி அன்றுதான் அவனைச் சிறிது தளர்த்தியது. சோர்ந்து படுத்தான், அயர்ந்துவிட்டான்...

அப்பா! என்ன ஜோதி! அகண்டமான எல்லையற்ற வெளி! அதிலே சாத்தனின் இலட்சியம். அந்த அர்த்தமற்ற, ஆனால் அர்த்தபுஷ்டி மிகுந்த, ஒரு புன்சிரிப்பு! மெதுவான ஹிருதய தாளத்தில் நடனம்! என்ன ஜீவன்! என்ன சிருஷ்டி!

திடீரென்று எல்லாம் இருண்டது! ஒரே கன்னக் கனிந்த இருள்! ஹிருதய சூனியம் போன்ற பாழ் இருட்டு!

பிறகும் ஒளி... இப்பொழுது தங்கத்தினாலான கோவில்! கண்கள் கூசும்படியான பிரகாசம்!... கதவுகள் மணியோசையுடன் தாமே திறக்கின்றன. உள்ளே அந்தப் பழைய இருள்!

சாத்தன் உள்ளே செல்லுகிறான். இருட்டின் கரு போன்ற இடம் அதில் மங்கிய தீபவொளி தோன்றுகிறது! என்ன! இதுவா பழைய சிலை! உயிரில்லை! கவர்ச்சிக்கும் புன்னகையில்லையே!... எல்லாம் மருள்!... மருள்...!

அந்தகார வாசலில் சாயைகள் போல் உருவங்கள் குனிந்தபடி வருகின்றன. குனிந்தபடி வணங்குகின்றன.

"எனக்கு மோட்சம்! எனக்கு மோட்சம்!" என்ற எதிரொலிப்பு அந்தக் கோடிக்கணக்கான சாயைகளின் கூட்டத்தில் ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்கவில்லை! இப்படியே தினமும் ...

நாட்கள், வருஷங்கள், நூற்றாண்டுகள் அலைபோல் புரள்கின்றன – அந்த அனந்த கோடி வருஷங்களில் ஒரு சாயையாவது ஏறிட்டுப் பார்க்க வேண்டுமே!

"எனக்கு மோட்சம்...!" இதுதான் பல்லவி, பாட்டு, எல்லாம்!





சாத்தன் நிற்கிறான்...

எத்தனை யுகங்கள்! அவனுக்கு வெறி பிடிக்கிறது. "உயிரற்ற மோட்சச் சிலையே! உன்னை உடைக்கிறேன்! போடு! உடை! ஐயோ, தெய்வமே! உடைய மாட்டாயா! உடைந்துவிடு! நீ உடைந்து போ! அல்லது உன் மழு என்னைக் கொல்லட்டும். அர்த்தமற்ற கூத்து...!" இடி இடித்த மாதிரி சிலை புரள்கிறது – சாத்தனது ஆலிங்கணத்தில், அவன் ரத்தத்தில் அது தோய்கிறது... ரத்தம் அவ்வளவு புனிதமா! பழைய புன்னகை!...

சாத்தன் திடுக்கிட்டு விழித்தான். வெள்ளி முளைத்துவிட்டது. புதிய கோவிலின் சங்கநாதத்துடன் அவனது குழம்பிய உள்ளம் முட்டுகிறது.

"என்ன பேய்க் கனவு, சீ!" என்று விபூதியை நெற்றியில் அணிந்து கொள்கிறான்.

"பைலார்க்கஸ் – பாவம் அவன் இருந்தால்..." சாத்தானின் மனம் சாந்தி பெறவில்லை.

* * *



Scanned with CamScanner

## செய்தி

தி. ஜானகிராமன்

என்னடாது? "பிள்ளையின் முகத்தில் அருவருப்பும் கோபமும் முண்டி நின்றன. 'நிறுத்து!' என்று கையை உயர்த்தினார் நாதஸ்வர ஓசை நின்றது." என்னடாது சோதனை! விடிஞ்சதும் விடியாததுமா! இதையெல்லாம் ராத்திரியிலே வச்சுக்கிட்டிருக்கே; சரி, தொலையுதுன்னு நெனச்சா, காலமேயும் ஆரமிச்சிட்டியே. ஏண்டா கோடாலிக்காம்பு. என்னடா தெல்லாம்? காலமே பிலஹரியும் கேதாரமும் பாடி ஆகாசம் முழுக்கப் பூப்பூவாக உலுக்க வேண்டிய வேளையிலே. இதென்னடா ஒப்பாரி! உனக்கென்ன, பைத்யம் கிய்த்யம் பிடிச்சிருக்கா!' பிள்ளையாண்டான் நாதஸ்வரத்தைக் தடவிக்கொண்டே உட்கார்ந்திருந்தான். பேசவில்லை. 'கண்ணைப் புட்டிகிறதுக்கு முன்னாடி இந்த ஒப்பாரி வச்சு அழுவவா, உனக்கு வித்தை சொல்லிக் குடுத்தது? இதுக்கு ஆத்தங்கரைத் தெருவிலே ஒரு கசாப்புக் கடை வச்சுக்கிட்டு கறி கொத்திக்கிட்டு உக்காந்திருக்கலாமே.

நாயனம் எதுக்கு? ஒத்து எதுக்கு? ஏன் மூஞ்சியைச் சிணுக்குறே? நான் சொல்றது கசக்குதா? சொல்லேண்டா! வாயைத் தொறந்து பதில் சொல்லு! "இன்னிக்குக் கச்சேரின்னீங்களே. அதுக்குத்தான் சாதகம் பண்ணக்கிட்டிருந்தேன்" என்று வாயைத் திறந்தான் பிள்ளையாண்டான். ரொம்ப சாவதானமாகப் பதில் சொன்னான். "சாதகமா?" ஹம்! என்று கிண்டலாக ஒரு ஹூம்காரம். பளார் என்று ஓர் அறைவிட வேண்டும்போல் அவருக்குப் பற்றிக்கொண்டு வந்தது. அடுத்த கணம் ஒரு சந்தேகம் வந்தது. புத்தி ஸ்வாதீனம் இல்லையோ இவனுக்கு என்று





நினைத்தார். "கச்சேரி பண்ணப்போவது யாரு தெரியுமில்லே?"... "யாரு தெரியுமான்னேன்?"... "தொறவேண்டா வாயை!" "நீங்கதானே! அப்ப உன்னைக்கூட உக்காத்தி வச்சுக்கிட்டு இந்த ஒப்பாரி, நவதான்ய கோத்ரம், இந்த சினிமாப் பாட்டு எல்லாத்தையும் வாசிக்க உடுவேன்னு நெனச்சியா? பெருச்சாளி அஞ்சறைப் பெட்டியைக் கவுந்த மாதிரி. இந்தச் சத்தம் எல்லாம் அங்க வந்து ஊதலாம்னு நெனச்சியா?" கச்சேரி கேக்கறவங்க வெள்ளைக்காரங்கப்பா... "ஆமாம். அதுக்காக?" "அவங்களுக்குப் புரியும்படியா ஏதாவது வாசிச்சாத்தானே தேவலாம்."

'நீ இப்ப என்ன சொல்றே? நான் வாசிக்கிறது அவங்களுக்குப் புரியப் போவதில்லை. என் பேரைக் காப்பாத்தறதுக்காக நீ புரியும்படியா இந்த மாதிரி ரண்டு வாசிச்சு, நம்ம ஊருக்கு வந்தது வீணாப்போயிடலேன்னு நெனச்சுக்கும்படியா அங்களையும் செஞ்சுடப்போறேன்னு சொல்லு!' தங்கவேலு மௌனம் சாதித்தான். ஏதோ அவர் சொல்லுவது சரிதான் என்று ஆமோதிப்பதுபோல, தகப்பனார் கிண்டல் சாட்டை சாட்டையாக அவன்மீது விழுந்தாலும்,. உண்மை என்னவோ தன் பக்கந்தான் என்று தியாகிபோல மௌனம் சாதித்துக் கொண்டிருந்தான். அவன், 'ஐயரு என்ன சொன்னாரு தெரியுமில்லே? அப்பட்டமாக நம்ம சங்கீதம்னா வேணும்னு கேட்டாரு. வந்திருக்கிறவங்க அதைத்தான் கேட்டாங்களாம். அவங்களுக்குப் புடிக்குதோ புடிக்கலையோ இப்ப என்னாத்தைத் தெரியும். புடிக்காதுன்னு நீயே இப்பவே சமாதி கட்டிப்பிட்டியா என்ன? புரியக்கூடியதாக கேக்குணும்னு வரலை அவங்க. நம்ம சங்கீதம் எப்படி இருக்கும்னு தெரிஞ்சுக்கணுமாம். வாசிச்சாத்தானே புரியுதா இல்லையான்னு தெரியும். நீ இந்த டபக்குடபா'வை வாசிச்சு, 'இதான் எங்கள் சங்கீதம்னு' கொடி கட்டலாம்னு பாக்கறே...! ஆகாகா! நம்ம சங்கீதத்து மானத்தை காப்பாத்தணும்னு எவ்வளவு அக்கறை! எவ்வளவு கவலை...!' பையன் புன்சிரிப்புச் சிரித்தான்.



Scanned with CamScanner

பிள்ளைக்கும் சிரிப்பு வந்தது. "சிரிடா சிரி... சீச்சீ போ... வாத்தியத்தை எடுத்து அலம்பி வை!" வாத்தியத்தை உறையில் போட்டுக் கட்டி, ஆணியில் மாட்டிவிட்டு அப்பால் போனான் தங்கவேலு. பிள்ளை, அங்கேயே ஜன்னலோரமாக இருந்த பெஞ்சின்மீது உட்கார்ந்து, தாழம் பெட்டியை உருவிக் கொட்டைப் பாக்கைச் சீவ ஆரம்பித்தார். அந்த இடத்தில் தான் பரம்பரையாக வாத்தியங்கள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. பிள்ளையாண்டன் இப்போது ஊதுகிற வாத்யம், அவர் தந்தை வாசித்து, அமிருதமாகப் பொழிந்த வாத்யம். திருச்சேறைக் கோயிலில் அவர் வாசித்த உசேனி ராகத்தை நினைத்தால் இப்போதுகூட உடல் சிலிர்க்கிறது. எவ்வளவு உருக்கம்! எவ்வளவு ஜீவன்! எவ்வளவு ஸ்வானுபூதி! நாதத்தின் உயிரைக் கவ்வும் குழைவு! அதே வாத்யத்தில்தான் இப்போது தங்கவேலு கில்லாடி அபஸ்வரங்களை ஊதித் தள்ளிக்கொண்டிருக்கிறான். ஒரு வருஷமாக அந்தக் கவலைதான் அவருக்கு கல்யாணங்களில் எட்டுத் திக்குக்கும் ஓலமிடும் சினிமாப் பாட்டுகளை நாகஸ்வரத்தில் சாதகம் செய்துகொண்டு வந்தான். தங்கவேலு மக்களை ரஞ்ஜகம் செய்யச் சக்தியில்லை என்று அவரை அதிலிருந்தே உலகம் ஒதுக்கிவிட்டது. அதற்காக அவர் கவலைப்படவில்லை. ஆதீனத்துக் கோயில் மான்யம் அளிக்கிற வரையில் சங்கீதம் உயிரிழக்காமல் நடமாடிக் கொண்டிருக்கும் என்று அவருக்குத் தைரியந்தான். வயிற்றுக்கு இருக்கிறது.

சோறு துன்னது போக இரண்டு ஜதை வேஷ்டி. மேலுக்கு இரண்டு துணுக்கு. அவளுக்கு நாலு சேலை, அவனுக்கு நாலு வேஷ்டி - இவ்வளவுக்கும் காணும் மனிதனுக்கு இதைவிட வேறு என்ன தேவை? இதுதான் புரியவில்லை. தோடாவும் பெயரும் பத்திரிகையில் படமும் வேண்டாம். தலையெடுத்து இருபத்தைந்து வருஷமாக இப்படி ஒரு பயலைச் சட்டை செய்யாமல் காலம் ஓடிவிட்டது. இனிமேல் இந்தத் தங்கவேலுக்கும் ஞானத்தில் ஒன்றும் குறைச்சல் இல்லை. அவரும் மனித சரீரம் ஏதோ





எப்படியோ என்று தெரிந்தவற்றையெல்லாம் அவசர அவசரமாக அவனுக்கு உருவேற்றிக்கொண்டுதான் வந்தார். ஆனால் இந்த அசத்து, 'அம்மாசிப் பீடை'க்குத் தத்தாரிகளை, ஞான சூன்யங்களைத் திருப்தி செய்ய வேண்டும் என்று எப்படித்தான் தோன்றிற்றோ? சங்கீதத்துக்குத்தான் விநாச காலம் வந்துவிட்டதோ? கடவுளே அழிந்துகொண்டிருக்கும்போது, அவருடைய பெயர் அழிய எத்தனை நாளாகப் போகிறது? நாகஸ்வரம் அதே உறையில்தான் தொங்கிக் கொண்டிருக்கிறது. அவர் தந்தை காலத்திலேயே போட்ட முரட்டுப் பட்டு உறை. ஆனால் நாகஸ்வரம், வேறு எதற்கோ உறையாகி விட்டது! நாம் செய்வதுதான் தவறா! ஜனங்களுக்குப் புரியாத சங்கீதம் சங்கீதமா? புரியாத ஒரு கலை கலையாக இருக்குமா?" நம் வாத்தியத்தைக் கேட்டு நாலு பேர் சந்தோஷப்பட வேண்டுமென்றுதானே கூப்பிடுகிறார்கள்? அவர்களை விட்டு விட்டு நாம்பாட்டுக்கு எங்கோ ஒரு உலகத்தில் திரிந்து கொண்டிருப்பது முறைதானா?" எத்தனையோ வருஷமாகக் கேட்டுக் கொண்டிருக்கிற கேள்விதான்.

ஒரு வருஷமாகத் தினம் தினம் இந்தக் கேள்வி வர ஆரம்பித்துவிட்டது. மலயமாருதத்தை ஒரு சஞ்சாரம் செய்துவிட்டு, திடீரென்று ஒரு கூத்தாடி மெட்டை வாசித்தான் தங்கவேலு. விடியற்காலை... என்ன அபஸ்வரம்! குரங்குக்கு லோலக்கும் சட்டையும் போட்டு ஆட்டுகிறார் போல ஒரு தோற்றம் அந்தப் பாட்டைக் கேட்கும்போது அவர் முன் எழுந்தது. ஏதோ ஆவல் தூண்ட, பிள்ளை அவசர அவசரமாக உறையை அவிழ்த்தது. நாயனத்தை உதட்டில் வைத்தார். அந்த அபஸ்வரம் அவருக்கு வரவில்லை. எந்த ஸ்வரத்திலும் சேராமல், ஒரு பிடி ஒன்று அவரைத் திணற அடித்தது. வாய் நிறையத் தண்ணீரை வைத்துக்கொண்டு மல்லாந்து படுத்தவாறே நீளமாகத் துப்பினால் நுனியில் போய் வளைந்து விழுமே அந்த மாதிரி ஒரு பிடி. 'என்ன ஸ்வரமடா இது?' யோசித்தால் ஆதார சுருதியில்கூட



Scanned with CamScanner

உதைத்துவிட்டுத் துண்டாக நின்றது அது!' அட இப்படி ஒரு சங்கீதமா? சுருதியை விட்டுவிட்டு ஒரு ஸ்வரமா? சீ... சீ என்று சொன்னாரே ஒழிய அதுவும் ஒரு வித்தைதானே என்று மறுபடியும் அதைப் பிடித்துப் பார்த்தார் அவர். அந்தப் பிடி அவர் பிடியில் அகப்படவில்லை. அவர் பிடிவாதமும் பிடியின் பிடிவாதமும் சேர்ந்து போரைத் தொடங்கின. திணறி ஒரு சிரிப்புச் சிரித்தார் பிள்ளை.

'அப்படியில்லேப்பா.. இதைப் பாருங்க' என்று குரல் கேட்டது. பிள்ளையாண்டான் தோப்பன்சாமி மாதிரி நிலையண்டை வந்து பிடியைக் கற்றுக் கொடுப்பதற்காக நின்றான். "பலே!" "அது" "எங்கே வாசி பார்ப்பம்!" பிள்ளையாண்டான் வாசித்தான். "அந்த அவஸ்வரத்தை – அப்பன் பேர் தெரியாத மாதிரி ஒரு ஸ்வரம் வருதே – அதை எப்படிலே பிடிக்கறே? எனக்கு வரமாட்டேங்குதே!" மறுபடியும் முயன்று பார்த்தார். வரவில்லை. "இப்படிப் புடிச்சார்?" "வேறு ஒரு பிடி.". "அது நம்மடவங்க சங்கீதமால்ல போயிடுது?" "இது யாருது?" "இது வேறே." "எந்தத் தேசம்?" "அது என்னமோ!" பிள்ளை இடுப்புல் சோமனைக் கட்டுக்கொண்டு எட்டு அங்கமும் தரையில்பட, ஒரு நமஸ்காரம் செய்து எழுந்தார். "யாருக்குத் தெரியுமுல்ல இது? இந்த அபஸ்வரத்துக்கு. இனிமே அந்தப் பக்கமே நான் பாக்கமாட்டேன்." "என்னாங்க இது?" ஒரு காபியைக் கொண்டு வந்த அவர் சம்சாரம் கண்ணை அகல விழித்தாள். "நமஸ்காரம்" "யாருக்கு?" "நீ பத்து மாசம் சுமந்து பெத்திருக்கயே. அவரு பாடற சங்கீதத்துக்கு" "சும்மா ஒரு சினிமாப் பாட்டும்மா" என்றான் தங்கவேலு. "என் உங்களுக்கு வரல்லியா?" "நூறு ஜன்மம் பாலாபிஷேகம் செய்தாத்தான் வரும் போல் இருக்கு!" என்று பிள்ளை சிரித்தார். ஓர் ஒப்பந்தம் மாதிரி, சொல்லாமல் செய்து கொண்டார்கள். தந்தையும் பிள்ளையும் கல்யாண ஊர்வலங்கள் முடிகிற தருவாயில் சினிமாப் பாட்டுக்குச் சீட்டோ, உத்தரவோ வந்தால் அதைத் தங்கவேலு நிர்வாகம் செய்யவேண்டியது.





பிள்ளை எங்கேயாவது திண்ணையில் போய்ப் படுத்துக் கொண்டுவிடுவார் – இரவு வேளைகளில் புதிது புதிதாக இந்தப் பாட்டுகளைச் சாதகம் செய்துவந்தார் பிள்ளை. திடீரென்று காலையில் இதைக் கேட்டதுந்தான் அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. பிள்ளை நாயனத்தைப் பார்த்தார். வெள்ளைக்காரர்களாம்! சங்கீத கோஷ்டியாம்! சுத்தமான தெற்கத்திச் சங்கீதம் கேட்க வேண்டும் என்று ஆசையாம். எந்தச் சங்கீதம், கேட்டு வெகுகாலத்திற்குப் பிறகும் கூடக் கண்டா நாதத்தின் ஊசலைப் போல, ஹ்ருதயத்தில் ஒலிக்குமோ, மறையாமல் ஒலித்துக் கொண்டிருக்குமோ, அந்த மாதிரி சங்கீதம் கேட்க வேண்டுமாம்' என்று வக்கீல் மணி ஐயர் மூந்தாநாள் காலையில் வந்து சொன்னார். 'எதுக்குய்யா அவங்களுக்கு இந்த வம்பெல்லாம்?' என்று ஆரம்பித்தார் பிள்ளை. 'கருவேப்பிலைக்கு, வெட்டிவேருக்கு, பாலுக்கு எல்லாத்துக்குத்தான் இமிடேசன் வந்திடுச்சு. சுத்தமாவது சங்கீதமாவது? என்னங்க பைத்தியம் இது? உலகம் இன்னும் அப்படிச் சீரழிஞ்சு போயிடலை. உங்களுக்கு என்ன அதெல்லாம்? நான் சொல்றேன். நீங்க வாசிக்க வேண்டியதுதானே'. நாலு கீர்த்தனம் வாசியுங்கோ போதும். தவுல்கூட வாண்டாம். ஆத்மார்த்தமா, எப்படித் தனியா உட்கார்ந்திண்டு வாசிப்பேளோ, அந்த மாதிரி வாசிச்சா போதும். எதிரே இருக்கிறவன் சட்டையையும் நடையையும் உடையையும் பார்க்கக்கூட வாண்டாம்.

நீங்க பாட்டுக்கு கண்ணை மூடிக்கொண்டு, ரெண்டு கீர்த்தனம் வாசிச்சாப் போதும். "ஓய், நீங்க பொல்லாத ஆளுய்யா...!" என்று சிரித்தார் பிள்ளை. சட்டை கிட்டை போட்டுக்கணுமோ? "உங்க இஷ்டம். வந்திருக்கிறவன் நிறைகுடமாக இருக்கிறான். பேசிண்டிருந்தேன். அப்படித்தான் தோய்த்து நீங்க சட்டை போட்டுண்டா என்ன? போட்டுக்காட்டா என்ன?" 'இரவு ஆறு மணிக்குக் கச்சேரி. என்ன வாசிக்கலாம் என்று கண்வழிக்கும்போதே திட்டமிடத்



Scanned with CamScanner

தொடங்கினார் அவர். நாராசம்போல் தங்கவேலுவின் புதுச் சாதகம் நினைவைக் கலைந்துவிட்டது. மீண்டும் கசப்பையும் அலுப்பையும் ஒதுக்கிவிட்டு அமைதியைத் தேடுவதற்காக ஒரு ராகத்தைப் படித்துக் கொண்டு மனத்திற்குள்ளேயே அதன் வடிவைக் கண்டு, திகைத்துப் போய் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தன. அவருடைய மனம், ஆத்மா எல்லாம் அப்படியே சுவரில் சாய்ந்தபடியே தூங்கிவிட்டார் அவர். ஒற்றை மாட்டு வண்டியிலிருந்து இறங்கி, பிள்ளை வக்கீல் ஐயர் வீட்டில் நுழைந்தார். தங்கவேலுவும், வாத்தியங்களைத் தூக்கிக்கொண்டு ஒத்துக்காரரும் பின்னால் வந்தார்கள். பெரிய ஹால். வாசலிலிருந்தே அவரைக் கையைப் பிடித்து அழைத்துப்போன வக்கீல் உள்ளே குழுமியிருந்த கோஷ்டியை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார். "இவர்தான் பிலிப் போல்ஸ்கா. இந்த சங்கீத கோஷ்டியின் தலைவர்." பிலிப் போல்ஸ்கா மகரிஷி மாதிரி இருந்தான்.

வயது எழுபது இருக்கும்போல இருந்தது. தலையில் வழுக்கை இல்லை. பொல்லென்று வெளுத்துப்போன மயிர் தலையில் பறந்து கொண்டிருந்தது. சற்று நடுத்தர உடலம். கண் பெரிய கண். மேலும் கீழும் தொட்டும் தொடாததுமாக விழிகள் அமைந்திருந்தன. பார்த்தும் பார்க்காதவை போன்ற விழிகள். நீலவிழிகள். ஆள் தூங்குகிறானோ அல்லது வேறு எங்காவது நினைத்து கொண்டிருக்கிறானோ என்று சந்தேகம் எழுப்பும் விழிகள். அந்தக் கண்களை ஒரு விநாடி பார்த்தார் பிள்ளை. சுருக்குப் போட்டு இதயத்தை இழுப்பது போன்ற ஓர் உணர்ச்சி. அவர் உள்ளம் போல்ஸ்காவிடம் ஒரு தாவாகத் தாவிற்று. "நிறைகுடம்னு சொன்னீங்கள்ள, ஞாபகமிருக்கா?" என்று வக்கீலைப் பார்த்தார். "இருக்கு". "சரியான வார்த்தை! கண்ணைப் பாருங்க. முகம் எவ்வளவு அழகாயிருக்கு. பாத்தீங்களா?" நானும் அதைத்தான் யோசிச்சிண்டிருக்கேன். நீங்க சொன்னதைச் சொல்லட்டுமா? வாண்டாம். முகஸ்துதி எல்லாம் நமக்குள்ளேயே





இருக்கட்டும். தேசம் விட்டுத் தேசம் வாணாம். என்ன சொன்னேன்னு கேட்டான்னா, ரொம்பச் சந்தோசம். அவரைப் பார்த்ததிலேன்னு சொன்னான்னு சொல்லுங்க. "போல்ஸ்காவுக்குப் பிறகு கூட வந்திருந்த இருபது இருபத்தைந்து பேருக்கும் வக்கீல் பிள்ளையை அறிமுகப்படுத்தினார்." மேலே ஏறி உட்கார்ந்து ஒத்துக்காரன் ஆரம்பித்ததும், ஒலையைச் சரிபண்ணிக் கொண்டார் பிள்ளை.

தங்கவேலு மேடைக்குப் பின்னால் உட்கார்ந்து கொண்டான். நாட்டையைக் கம்பீருமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனத்தைத் தொடங்கினார். போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. விழி மேலே செருகியிருந்தது. அமிருத தாரையாகப் பெருக்கெடுத்த நாதப் பொழிவில் அவன் தன்னை இழந்துவிட்டான் போல் தோன்றிற்று. நாதம் அவனுடைய ஆத்மாவை, காணாத லோகங்களுக்கும் அநுபவங்களுக்கும் இழுத்துச் சென்றது போல தோன்றிற்று. சளைத்துப்போய் ஆற்றோடு போகிறவனைப் போல், இஷ்டப்படி வெள்ளம் தன்னை அடித்துப்போகும்படி விட்டுவிட்டான் அவன். சட்டென்று நாதம் நின்றது. போல்ஸ்காவின் கண் இன்னும் அந்த அநுபவத்தில் திளைத்துக் கொண்டிருந்தது. மேலே செருகிய விழிகள் கீழே இறங்கிப் பிள்ளையைப் பார்க்க ஒரு நிமிஷம் ஆயிற்று. இடையும் கால் சட்டையுமாகச் சப்பணம் கட்டு அமர்ந்திருந்த அந்தக் கூட்டம் பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருந்தது. "ஐயா, ஒரு சின்னச் சோதனை வைக்கப்போறேன்" என்றார் பிள்ளை. வக்கீலைப் பார்த்து, "என்ன?" "பாருங்களேன்". வக்கீல் ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தார். பிள்ளையின் முகத்தைப் பார்த்த அவருக்கு ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை. "தஸ்ரிமா ... மா" என்று ஆரம்பித்தார் பிள்ளை சாமா ராகம் என்று அடையாளம் கண்ட வக்கீல் பிள்ளையை வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். ராகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்து கொண்டிருந்தது.



Scanned with CamScanner

நடுநிசியில் தோட்டத்தில் மலர்ந்து மணத்தைப் பெருக்கும் – அமைதியான மணத்தை வீசும் – பவழமல்லியின் நினைவு அவருள்ளத்தில் தோய்ந்தது. அவர் சிரம் அங்கும் இங்கும் விட்டுவிட்டு வரும் அந்த மணத்திற்கு இசைவாக அசைந்து கொண்டிருந்தது. ராகம வளர்ந்து கொணடிருந்தது. யாரோ கையாட்டுகிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தார் வக்கில். போல்ஸ்காதான். அவன் உடல் ராகத்தோடு இசைந்து அசைந்து கொண்டிருந்தது. இரண்டு கைகளையும் எதையோ வாங்கிக் கொள்வதுபோல் நீட்டிக் கொண்டிருந்தான். முகத்தில் ஒரு புன்சிரிப்பும், சன்னதம் வந்தவன் மாதிரி அந்த முகம் நினைவிழந்து எங்கேயோ ஆகாசத்தைப் பார்த்துக் கொண்டிருந்தது. திடீரென்று உட்கார்ந்திருந்தவன் எழுந்துவிட்டான். கையை நீட்டியபடியே நின்று கொண்டு, மெல்லிய காற்றில் அடையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். ராகம் இன்னும் வளர்ந்தது நின்று கொண்டிருந்தவன் அடியெடுத்து வைத்தான். கைகளை நீட்டி ஏற்றிக்கொண்டே அடியெடுத்து வைத்தான். நடந்து நடந்து மேடைமுன் வந்ததும், மெதுவாக முழந்தாளிட்டு உட்கார்ந்துகொண்டான். கையை மேடையோரத்தில் வைத்து முகத்தைப் புதைத்து கொண்டான். வக்கீலும் போல்ஸ்கா கோஷ்டியும் போல்ஸ்காவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். போல்ஸ்கா எந்த உலகத்தில் அலைகிறானோ எந்த வானில் திரிகிறானோ? அவன் நலத்தைக் கலைத்துவிடப் போகிறோமே என்று பயந்தாரோ என்னவோ பிள்ளை.

ராக ஆலாபனத்தைக்கூட ஓர் இடத்தில் நிறுத்தாமல் அப்படியே கீர்த்தனையைத் தொடங்கிவிட்டார். "சாந்தமுலேகா..." குழந்தையைக் கொஞ்சுகிறது போல அந்த அடி கொஞ்சிற்று. சத்யத்தைக் கண்டு இறைஞ்சுவது போல் கெஞ்சிற்று. போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது. முதுகு ஒரு சொடுக்குடன் உலுக்கியத்தில் தெரிந்தது. கீர்த்தனம் முடிந்தது. வாத்தியம் நின்றது. மேடையில் கைவைத்து, முகத்தைப் புதைத்துக் கொண்டிருந்த





போல்ஸ்கா ஓர் எட்டு எட்டிப் பிள்ளையின் கையைப் பிடித்தான். கெஞ்சுகிறாற்போல் ஒரு பார்வை. பிள்ளை திருதிருவென்று விழித்தார். தைரியத்தைக் தருவித்துக்கொண்டு குழந்தையைப் பார்த்துச் சிரிப்பது போல ஒரு சிரிப்புச் சிரித்தார். "மிஸ்டர் பிள்ளை, மிஸ்டர் பிள்ளை" என்று கையைப் பிடித்துக் கொண்டே கெஞ்சினான். போல்ஸ்கா குரல் நடுங்கித் தழுதழுத்தது. "மிஸ்டர் பிள்ளை! வேறு ஒன்றையும் வாசிக்காதீர்கள். என் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. வேறு வேண்டாம்" பிள்ளை பாஷை தெரியாமல் விழித்தார்; வக்கீலைப் பார்த்தார். "மிஸ்டர் பிள்ளை! இதையே வாசியுங்கள். இல்லாவிட்டால், என்.. என் உயிர் போய்விடும்". "பிள்ளைவாள், சாந்தமுலேகாவையே திரும்பி வாசிக்கச் சொல்றார்" என்று நிசப்தத்தைக் கலைக்கத் துணிவில்லாமல் மெதுவாகச் சொன்னார் வக்கீல் மீண்டும். "சாந்தமுலேகா!" "எஸ்.. எஸ்" என்றார் போல்ஸ்கா. தலை அசைந்து கொண்டிருந்தது. கீர்த்தனம் முடிந்தது.

"நிறுத்த வேண்டாம்" என்று கெஞ்சினான் போல்ஸ்கா. "நிறுத்தாதிங்கோ பிள்ளைவாள், ஆவேசம் வந்தவன் மாதிரி இருக்கான், பேசாமே வாசியுங்கோ". "மீண்டும் அதே நாதம் பொழிந்து. ஐந்து ஆறு தடவை திருப்பித் திருப்பிக் கீர்த்தனத்தை வாசித்து முடித்தார் பிள்ளை. கடைசியில் தாம் மௌனத்தில் போய் லயித்தது போல, இசை நின்றது. போல்ஸ்கா அப்படியே தலையை அசைத்துக் கொண்டே இருந்தான். கோயில்மணியின் பார்வையைப் போல அந்த நிசப்தத்தில் அவன் சிரமும் உள்ளமும் ஆத்மாவும் அசைந்து ஊசலிட்டுக் கொண்டிருந்தன. மூன்று நிமிஷம் ஆயினும் வக்கீல் ஒரு பெருமூச்சு விட்டார். தொண்டையில் வந்த கரகரப்பைப் பயந்துபயந்து கனைத்தார். திரும்பிப் பார்த்தான் போல்ஸ்கா. "மிஸ்டர் ஐயா, மிஸ்டர் பிள்ளை. இதில் ஏதோ செய்தி இருக்கிறது. எதோ போதம் கேட்கிறது. எனக்கு ஒரு செய்தி. எந்த உலகத்திலிருந்தோ வந்த ஒரு செய்தி கேட்கிறது. அந்தப் போதத்தில்தான் திளைத்துக்



Scanned with CamScanner

கொண்டிருக்கிறேன். இன்னும் எனக்கு வேகம் அடங்கவில்லை. செய்திதான் அது. எனக்காக அனுப்பிய செய்தி. உலகத்துக்கே ஒரு செய்தி. உங்கள் சங்கீதத்தின் செய்தி அது!" "குழந்தையைப் போல் சிரித்துக்கொண்டே நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடுமாறினார். "புரிகிறதா?" என்று கேட்டான். "புரிகிறது போல் இருக்கிறது" என்றார் வக்கீல். "எனக்கு நன்றாகப் புரிகிறது. அது செய்தி.

உலகத்திலேயே எந்தச் சங்கீதமும் இந்தச் செய்தியை எனக்கு அளிக்கவில்லை. இரண்டு கைகளையும் நீட்டி அதை நான் ஏந்தி வாங்கிக் கொண்டுவிட்டேன். ஒருவரும், ஒரு கலையும் ஒரு சங்கீதமும் கொடுக்காத செய்தியை நான் இப்போது பெற்றுக்கொண்டு விட்டேன். நீங்கள் இப்போது என்னை உடலை விட்டுவிடச் சொன்னால் நான் விட்டுவிடத் தயார்" என்றான். "என்னங்க?" என்று கேட்டார் பிள்ளை. வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார் கேள்வியை. "என்ன தோன்றிற்று என்று கேட்கிறாரா?" மிஸ்டர் ஐயர், மிஸ்டர் பிள்ளை! உலகம் முழுவதும் பிணக்காடாகக் கிடக்கிறது. ஒரே இரைச்சல். ஒரே கூட்டல், ஒரே அடிதடி, புயல் வீசி மரங்களை முறிக்கிறது. அலை உயர உயர எழுந்து குடிசைகளை முழுக அடிக்கிறது. இடி விழுந்து சாலையின் மரங்கள் பட்டுப்போகின்றன. கட்டிடம் இடிந்து விழுகிறது. எங்கே பார்த்தாலும் ஒரே இரைச்சல்.. இந்தப் போர்க்களத்தில், இந்த இரைச்சலில், நான் மட்டும் அமைதி காண்கிறேன். மெதுவாக இந்த இரைச்சல் தேய்ந்து, இந்தப் பிரளயக் கூச்சலும் இரைச்சலும் மெதுவாக அடங்கித் தேய்கிறது. ஓர் அமைதி என் உள்ளத்தில் எழுகிறது. இனிமேல் இந்த இரைச்சலும் சத்தமும் யுத்தமும் என்னைத் தொடாது. நான் எழுந்துவிட்டேன். அரவமே கேட்காத உயரத்திற்கு மேகங்களுக்கும் புயலுக்கும் அப்பாலுள்ள உயர்விற்கு எழுந்து, அங்கே அமைதியை, அழியாத அமைதியைக் கண்டுவிட்டேன். இந்த அமைதி எனக்குப் போதும். இப்போதே நான் மரணத்தை வரவேற்று, இந்த அமைதியில் கலந்துவிடத்





தயாராயிருக்கிறேன். "அமைதியுடன்தான் பேசினான் போல்ஸ்கா."

வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார். பிள்ளை திகைத்துப் போனார். "அமைதியா, அப்படியா தோணித்து இவருக்கு!" "ஆமாம்." "நிஜமாவா?... அப்படீன்னா நம்ம தியாகராஜ ஸ்வாமியும் அமைதி வேணும்தானே, சாந்தம் வேணும்னு தானே இந்தக் கீர்த்தனத்திலே பாடியிருக்கிறாரு. எவ்வளவு ஏக்கத்தோடு கேட்டிருக்காரு. அதேயா இவருக்கும் தோணிச்சாம்?" "அப்படித்தானே சொல்கிறார் இவர்." "வார்த்தைகூடச் சொல்லலையே நான். எப்படி இவருக்குத் தெரிஞ்சுது?" திகைத்துப் போய் உட்கார்ந்தார் பிள்ளை."மிஸ்டர் போல்ஸ்கா, இந்தப் பாட்டும் அமைதி வேண்டும் என்றுதான் அலறுகிறது. நீங்கள் சொன்ன புயல், இடி என்ற மாதிரியில் சொல்லாவிட்டாலும், அமைதி, அமைதி என்று அமைதியைத்தான் கடைசி லஷ்யமாக இந்தப் பாட்டு இறைஞ்சுகிறது." "அப்படியா!" என்று போல்ஸ்காவும் சமைந்துபோய் விட்டான். செய்திதான் இது. நாதத்துக்குச் சொல்லவா வேண்டும்! "எந்த வரம்பையும் கடந்து செய்தியை அது கொடுத்துவிடும்" என்றான் அவன். "இந்தக் கையை கொடுங்கள். வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரலைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன்" என்று பிள்ளையின் விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக் கொண்டான் போல்ஸ்கா. பிள்ளைக்கும் ஒரு செய்தி கிடைத்துவிட்டது!

* * *



Scanned with CamScanner

# நாயனம்

ஆ. மாதவன்

இறந்தவருக்கு ஒன்றும் தெரியாது. புதிய மல் ஜிப்பா, வேஷ்டி அணிந்து கொண்டு, நெற்றியில் மூன்று விரல் திருநீற்றுப் பட்டையுடன், நீட்டி நிமிர்ந்து அந்திமத் துயில் கொள்கிறார். கறுப்பு உடம்பு, வயசாளி, மேல்வரிசைப் பல் கொஞ்சம் பெரிசு, உதட்டை மீறி ஏளனச் சிரிப்பாக அது வெளித்தெரிகிறது. தலைமாட்டில் குத்து விளக்கும். நுனி வாழையிலையில் நிறைநாழி பழமும் ஊதுவர்த்தியும், சிவப்பு அரளிப்பூ மாலையுமாக ஜோடித்திருக்கிறார்கள். சாவு மணம் ஊதுவத்தியிலிருந்து கமழ்கிறது.

'யென்னைப் பெத்த யப்போவ் ... யெனக்கினி ஆரிருக்கா...?' என்று கால்மாட்டில் பெண்கள் கும்பலிலிருந்து நாற்பது வயசுக்காரி கறுப்பி முட்டி முட்டி அழுகிறாள். அவளுக்குப் பச்சைக் கண்டாங்கிதான், பொருந்துகிறது.

சாயங்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தென்னந்தோப்புக்கு அப்பால், வாழைப் பண்ணையைத் தாண்டி, பாறைகள் நிறைந்த ஆற்றின் புதுவெள்ளத்தின் குளிரைக் காற்று சுமந்து வருகிறது. காக்கைகள் கூட்டுக்குப் பறந்து போகின்றன. தாழைப்புதர் வேலிகளின் நடுவில் – வாய்க்கால்கரையிலிருந்து, முற்றிய கமுகு மரத்தை வெட்டிச் சுமந்து கொண்டு வந்து, முற்றத்தில் பாடை ஏணி தயாரிக்கிறார்கள், பிளந்த கமுகுமரம், வெளீரென்று பொள்ளையாக முற்றத்தில் துண்டாகிக் கிடக்கிறது.

வாசலில், இளவுக் கூட்டத்தினரிடையே, செத்தவரின் தடியன்களான ஆண்பிள்ளைகள் இரண்டும் அழுக்குத் துண்டை





அணிந்து கொண்டு கறுகறுவென்று, எண்ணெய்ச் சிலைகள் போலத் தலைகுனிந்து அமர்ந்திருக்கிறார்கள். சின்னவன், கொஞ்சம் அழுகிறான். பெரியவன் முழங்கையைக் கன்னத்துக்கு முட்டுக் கொடுத்துக் கூரையின் துலாக்கட்டையைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். உள்ளேயிருந்து வரும் ஒப்பாரி, இப்பொழுது பழக்கமாகி சாதாரணமாகி விடுகிறது.

'இப்படியே இருந்தாப் பொழுதுதான் இருட்டும். இருட்டு வருமுன்னே இதோ அதோன்னு காரியத்தை முடிப்பம். என்ன தங்கப்பா?'

'ஆமாமாம், நாயனக்காரனைத்தான் இன்னம் காணோம். யாரு போயிருக்கிறாங்க, அழைச்சார?'

'வடிவேலும், சின்னண்ணனும் போயிருக்கிறாங்க. மேலாத்தூரிலே இன்னிக்கு அம்புட்றது கஸ்டம். அல்லாம், முத்துப்பட்டி திருவிழாவுக்குப் போயிருப்பாங்க.

'சின்னண்ணன் போயிருக்கிறான்லியா அப்போ நிச்சயம் யாரையாவது இட்டுக்கிட்டு வருவான். வரட்டும், அதுக்குள்ளியும் மத்த வேலைங்களெப் பாக்கறது'.

மழைவரும் போல் இருந்தது. அந்தியிருள் குளிர ஆரம்பித்தது. கியாஸ் விளக்கொன்றைச் சுமந்து கொண்டு, வயல் வரப்பு வழியாக வாய்காலைத் தாண்டி ஒருவன் கரையேறி வந்து கொண்டிருக்கிறான். விளக்கின் ஒளியில், வாழைமரமும், பச்சை ஓலைப் பந்தலும் பெரிய பெரிய நிழல்களாக வளர்ந்து திரைக்காட்சி போல மாறிமாறிப் போயிற்று.

விளக்கு சுமந்து வந்தவன், வேர்க்க விறுவிறுக்க முற்றத்தில் ஸ்டாண்டு மேல் விளக்கை இறக்கி வைத்தான். விளக்கின் உஸ்...ஸ்! உள்ளே அழுகை ஓய்ந்து போயிருந்தது. குசுகுசுத்த குரலில் பெண்கள் வக்கணை பேசுகிறார்கள். ஊதுவத்தி இன்னும்



Scanned with CamScanner

மணமாக மணத்துக் கொண்டு புகை பரத்துகிறது. விளக்கு வந்துவிட்ட வசதியில், முற்றத்துச் சந்தடி, அங்கிங்காக விலகி நின்று கொண்டு இருட்டில், தெரியாத வயல் வரப்பைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. சலிப்பு – எல்லாரது முகத்திலும் அசட்டுக்களையை விரவி விட்டிருக்கிறது. சும்மாவேணும் எத்தனைதரம் வெற்றிலை போடுகிறது? எத்தனை தரம் பீடி பிடிக்கிறது?

'விடிஞ்ச மொதக் கொண்டு ஒண்ணுமே சாப்பிடலே. எப்போ இந்தக் காரியம் முடியறது, குளிச்சு மாத்திச் சாப்பிடுறதோ? சரியான தொந்தரவு போ.

யாரோ ஓராள் இருட்டைப் பொத்துக் கொண்டு, வெள்ளையாக நடையும் வேகமுமாக ஓடிவந்தான்.

'சின்னண்ணனும். வடிவேலும் தட்ராம்பட்டிக்குச் சைக்கிள்லே போயிருக்கிறாங்க. மேலாத்தூரிலே யாரும் நாயனக்காரங்க ஆம்புடலியாம் சேதி சொல்லச் சொன்னாங்க, வந்தவன், பந்தலையும் – கியாஸ் விளக்கையும் – முசுமுசுத்த கும்பலையும் – உள்ளே பெண்களின் அர்த்தமற்ற அலமலங்களையும் – மாறி மாறிப் பார்த்து விட்டுப் பீடிக்கு நெருப்புத் தேடி ஒதுங்கினான். எப்பிடியும் தட்றாம்பட்டி போய் ஆளை இட்டுக் கொண்டு வர இன்னும் ஒரு மணியோ, ஒன்றரை மணியோ நேரமாகலாம். கும்பலின் முகம் சுணங்கியது.

'இந்தக் காலத்திலே, யாருப்பா நாயனமும் பல்லக்கும் வச்சுக்கிறாங்க? ஏதோ அக்கம் அசலுக்கு ஒரு தொந்தரவு இல்லாமே, காரியத்தை முடிக்கிறதே விட்டுவிட்டு இப்போ பாரு, எத்தினி பேரு இதுக்கோசரம் காத்துக் கெடக்கிறாங்க?'

'இல்லே, மூத்த பிள்ளைதான் சொல்லிச்சிது. செத்தவரு முன்னாடியே சொல்லிவச்ச சங்கதியாம். தமக்கு, சுடுகாடு யாத்திரை தவுல் நாயனக் கச்சேரியோட நடத்தணுமினு. அதாம்





அந்தப் பொண்ணும் அழுகையா அழுதிச்சி. செத்தவங்க ஆத்துமா நிம்மதியாகப் போகட்டுமேன்னுதான். இப்போ, மேலாத்தூர் போய் அங்கியும் ஆம்புடாமே தட்றாம்பட்டி போயிருக்கிறாங்களாம்.'

'நல்ல ரோதனையாப் போச்சு. செத்தவங்களுக்கென்ன? அவுங்க போயிட்டாங்க. இருக்கிறவங்க களுத்து அறுபடுது'.

மழை வந்தேவிட்டது. ஹோவென்று, கூரை மேலும் பச்சைப் பந்தல் மேலும் இரைச்சலிட்டது. சுற்றிலும் கமுகு, தென்னை தாழைப்புதர் மேல் எல்லாம் கொட்டியதால் இரைச்சல் பலமாகக் கேட்டது. கியாஸ் லைட்டைத் திண்ணைமேல் தூக்கி வைத்தார்கள். திண்ணையில் அமர்ந்திருந்தவர்களின் தலை முண்டாசும், தலையும் பெரிய நிழல்களாகச் சுவரில் உருக்குலைந்து தெரிந்தன.

உள்ளே ஏதோ குழந்தை அடம்பிடித்து அழத்துவங்கியது. தாய்க்காரி பூச்சாண்டியைக் கூப்பிடுகிறாள். பிய்த்து எறிவேன் என்கிறாள். 'சனியனே, உயிரை வாங்காதே' என்கிறாள். குழந்தை நிறுத்தாமல் அழுகிறது.

எல்லோர் முகத்திலும், சலிப்பும், விசாரமும், பொறுமை இழந்த வெறுப்பும் நிறைந்திருக்கின்றன. தலை நரைத்த முக்கியஸ்தர்களுக்கு யாரை, என்ன பேசி, நிலைமையை ஒக்கிட்டு வைப்பது என்று தெரியவில்லை. எல்லாரும், இருட்டாக நிறைந்து கிடக்கும், வயலின் வரப்புப் பாதையையே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். மழை சட்டென்று ஓய்கிறது. இரைச்சல் அடங்குகிறது. கூரையிலிருந்து தண்ணீர் சொட்டுகிறது. முற்றத்தில் தண்ணீர் தேங்கி வழிந்து போகிறது.

இதற்குள்ளேயும் பாடை தயாராகி, உடம்பு சிவப்புப் பட்டு மூடிக்கொண்டு, நீட்டி நிமிர்ந்து – பந்தலில் தயாராகி இருந்தது. நீர் மாலைக்குப் போன புத்திரர்கள் இரண்டு பேரும்,



Scanned with CamScanner

மழையில் குளித்துத் தலைமேல் வெண்கல ஏனத்தைச் சுமந்து கொண்டு, பிணத்தின் தலைமாட்டில் வந்து, முக்காடிட்ட முண்டச்சிபோல நின்றார்கள்.

'பொம்மனாட்டிங்க குலவை போடுங்க தாயீ. யாருக்கும் சொல்லியா தரவேணும்?' என்று தலையாரி குரல் கேட்க, தாமதித்து நின்றவர்கள் போல் கிழவிகள், கொலு கொலுவென்று ஒப்பாரி போலவே குலவையிட்டார்கள். இருட்டில் ஒதுங்கி நின்றவர் ஒன்றிரண்டு பேர் கூடப் பந்தலுக்குள் வந்து திண்ணையில் நுழைந்தார்கள்.

'வாய்க்கரிசி போட இன்னும், உள்ளே பொம்மனாட்டிக இருந்தா வந்து போடலாம். நேரமிருக்குது' என்றார் தலையாரி.

'அட அதெல்லாம் எப்பவோ முடிஞ்சு போச்சே. இன்னும் புதிசாத்தான் ஆரம்பிக்கோணும். புறப்படுறதை விட்டுப்பிட்டு, அடியைப் புடிடா ஆப்பையாண்டீன்னு, முதல்லே இருந்தே ஆரம்பிக்கோணுமா? தம்பி, சின்னத்தம்பி உன் கைக்கடியாரத்திலே மணியென்ன இப்போ?

'மணியா? அதெல்லாம் ரொம்ப ஆச்சு. ஒம்போது ஆகப்போவுது. எப்போ நாயனக்காரங்க வந்து – எப்போ பொறப்பட போறமோ?

எல்லாரது கண்களும் வயல் வரப்பையே பார்த்துக் கொண்டிருந்தன. இப்போது – மரண சம்பவத்தைவிட, நாயனந்தான் முக்கியப் பிரச்சனையாக அத்தனை பேர் மனத்திலும் பெரிய உருக்கொண்டு நின்றது.

'யாரோ வர்றாப் போல இருக்குதுங்களே' என்று ஒரு குரல் தொலைவில் இருட்டுப் பாதையைப் பார்த்துச் சந்தேகப்பட்டது.

'ஆமாண்ணோவ். வர்றாங்க போல. யாரப்பா அது வெளக்கை சித்தெ தூக்கிக் கொண்டு போங்களேன். மழையிலே





சகதியும் அதுவுமா கெடக்குது. சின்னண்ணன் தான், தோள் அசைப்பைப் பார்த்தா தெரியுதில்லே'.

எல்லாரது முகங்களும் தெளிவடைந்தன. இடுப்பு வேஷ்டியை முறுக்கிக் கொண்டு, முரண்டாசைச் சரி செய்து கொண்டு எல்லாரும் எழுந்து தயாராகி நின்றனர். சில ஆண்பிள்ளைகள், உள்ளே பெண்களிடம் போய் விடைபெற்று வந்தனர். உள்ளே விட்டிருந்த அழுகை 'யங்கப்போ' என்று பின்னும் ஈனமாக எழுந்தது.

கியாஸ் விளக்கு வட்டத்தில், சின்னண்ணனும் வடிவேலுவும், வென்று வந்த வீரர்கள் போல முன்னால் நின்றனர்.

'அட, மேலாத்தூரிலே போனா அங்கே ஒரு ஈ, காக்கை இல்லெ. படு ஓட்டமா ஓடினோம். வீரண்ணன் சேரியிலே, ஒரு நல்ல வித்வான். மாரியம்மன் கொடையப்போ கூட நம்மூருக்கு வந்து வாசிச்சான். முனிரத்தினம்னு பேரு. எப்படியும் அவரே இட்டாந்திரலாம்னு போனா, மனுசன், சீக்கா படுத்த படுக்கையா கெடக்கிறான். விட்டா முடியாதுன்னு, சைக்கிளைப் புடிச்சோம். தட்றாம் பட்டுலே, தோ... இவங்களெத் தான் புடிச்சுக் கொண்ணாந்தோம். சமயத்திலே ஆள் ஆம்பிட்டதே தம்பிரான் புன்யமாப் போச்சு'.

எல்லாரும் பார்த்தார்கள்.

காய்ந்துபோன மூங்கில் குழாய் போல, சாம்பல் பூத்த நாயனத்தை வைத்துக் கொண்டு, மாறு கண்ணும், குட்டைக் கிராப்பும், காவி மேலாப்புமாக, ஒரு குட்டை ஆசாமி. 'இவானா?' என்ற கருவுவதற்குள், 'இவனாவது அந்த நேரத்தில் வந்து தொலைஞ்சானே' என்ற சமாதானம், எல்லாருக்கும் வெறுப்பை மிஞ்சி எட்டிப் பார்த்தது. தவுல்காரன், அடுப்படி தவசிப் பிள்ளை மாதிரி வேர்க்க விறுவிறுக்க, 'ஐயோ' என்ற பார்வையில், முன்னால் வரமாட்டேன் என்று பின்னால் நின்றான்.



Scanned with CamScanner

'வெட்டியானே கூப்பிடுறது. நெருப்பெல்லாம் ரெடி. சங்கை ஊதச்சொல்லு. பொறப்படலாமா? உள்ளே கேட்டுக்கோ.

தாறுடுத்திக் கொண்டு, பாடைப் பக்கம் நாலு பேர் தயாரானார்கள். கருமாதிக்கான பிள்ளைகள் இரண்டும், பெரியவன் தீச்சட்டியை வெட்டியான் கையிலிருந்து வாங்கிக் கொண்டான். சின்னவன், ஈர உடையில், வெட வெடவென்று நடுங்கிக் கொண்டு, பெரியவன் பின்னால் செய்வதறியாமல் நின்றான்.

'பொறப்படுங்கப்பா. தூக்கு' என்ற கட்டளை பிறந்ததும், தாறுடுத்த நால்வரும் பாடையின் பக்கம் வந்தார்கள். உள்ளேயிருந்து பெண்கள், முட்டிக் கொண்டு தலைவிரிக்கோலமாக ஓடி வந்தார்கள். 'யெங்களெ உட்டுட்டுப் போறீங்களே?' என்று கதறல் சகதியும் அதுவுமாகக் கிடந்ததினால் விழுந்து அழுவதற்கு எல்லாரும் தயங்கினார்கள். பெண் மட்டும், 'எங்கப்போ எனக்கினி யாருருக்கா?' என்று பாடையின் கால்மாட்டில் வந்து விழுந்தாள்.

'கோவிந்தா! கோவிந்தா!' என்ற கோஷத்துடன் பாடை தோளில் ஏறிற்று. 'யார்ருப்பா அது நாயனம். உம்... சும்மா உங்களைப் பார்க்கவா கூட்டியாந்தோம். முன்னாடி போங்க. வெளக்குத் தூக்கிறவன் கூடவே போங்க. மோளத்தைப் பிடிங்க'.

நாயனக்காரன் முகம் பரிதாபமாக இருந்தது. அழைத்து வந்த வேலண்ணன் அவன் காதருகில் ஏதோ சொன்னான். நாயனக்காரன் மெல்ல நாயனத்தை உதட்டில் வைத்து, 'பீ..., ப்பீ...' என்று சுத்தம் பார்த்தான். ஊர்வலம், சகதி வழுக்கும் வரப்புப் பாதையில் போய்க் கொண்டிருந்தது. கியாஸ் விளக்கின் ஒளியில் எல்லாம் நிழலும் தாழைப் புதரின் மேலே கமுகு மர உச்சிவரை தெரிந்தது.

'கூ....ஊ...ஊ...' என்று, வெட்டியானின் இரட்டைச் சங்கு அழுதது. நாயனக்காரன் வாசிக்க ஆரம்பித்திருந்தான். 'பீ...பீ என்ற





அவலம் பரிதாபகரமாக இருந்தது. தவுல்காரன்-சந்தர்ப்பம் தெரியாமல் வீறிட்ட குழந்தைபோல – வாத்தியத்தைத் தொப்புத் தொப்பென்று மொத்தினான்.

விவஸ்தை கெட்ட மழை வருத்தி வைத்த அலமலங்கலும், கீழே வழுக்கும் வரப்புப் பாதையும், தாழைப் புதரும், கமுகின் தோப்பின் உச்சியில் தங்கி நின்ற குளிர்ந்த இருட்டும், மரணமும், பசியும், அசதியும் வெறுப்பும், துக்கமும், எரிச்சலும், கோபமும், எல்லாருடைய உள்ளங்களிலும், நாயனத்தின் கர்ண கரமான அபஸ்வரமாக வந்து விழுந்து வயிறெரியச் செய்தது.

கியாஸ் விளக்கு முன்னால் போய்க் கொண்டிருந்தது. தீச்சட்டியில் குமைந்த வறட்டியின் புகையால் சங்கு ஊதுபவன் செருமினான். அனைவரும் பேச்சற்ற அவல உருவங்களாக நிழல்களை நீளவிட்டு நடந்து கொண்டிருந்தார்கள்.

'பீ...ப்பீ...பீ...பீ'

எல்லாருக்கும் வயிற்றைப் புரட்டியது. நெஞ்சில் ஏதோ அடைத்துக் கொண்டதுபோல சிரமமாக வந்தது. தலையைப் பிய்த்தது.

பின்னும், 'பீ...ப்பீ...பீ...பீ!'

ஊர்வலம், 'சனியனே' என்ற பாவனையில் அவனையே பார்த்துக் கொண்டு வழி நடந்தது. யாராருக்கெல்லாமோ பாதை வழுக்கியது. பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த சிறுவன் ஒருவன், சகதி தேங்கிய பள்ளத்தில் விழுந்தான். உடன் வந்த ஒருவர், அவனைத் தூக்கிவிட்டு, 'நீயெல்லாம் அங்கே எதுக்கோசரம் வரணும், சனியனே?' என்று எந்த எரிச்சலையோ அவன் மேல் கோபமாகக் கொட்டினார்.

ஆற்றங்கரை வரப்பு ஆரம்பமாகியிருந்தது. சிள் வண்டுகளின் இரைச்சல் கேட்டது. அக்கரையில், கடந்து வஞ்சித்



Scanned with CamScanner

துறையிலிருந்து தவளைகள், 'குறோம் குறோம்' என்று எதிர்ப்புக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தன. குட்டி குட்டிக் கறுப்புப் பன்றிகள் போலப் பாறைகள் நிறைந்த ஆற்றில், புதுவெள்ளம் இரைச்சலோடு ஒழுகும் அரவம் கேட்டது. குளிர், இன்னும் விறைப்பாக உடல்களைக் குத்திற்று.

சுடுகாட்டுத் தூரம் தீராத் தொலைவெளியாகத் தோன்றியது. இன்னும், 'பீ...ப்பீ...பீ...பீ

நாயனக்காரன் பக்கமாகத் தலை முண்டாசோடு வந்து கொண்டிருந்த தலையாரி முத்தன், அவனையும் அந்த நாயனத்தையும் ஒருமுறை வெறித்துப் பார்த்தார். கியாஸ் லைட்டின் மஞ்சள் வெளிச்சத்தில் உப்பென்று மூச்சு நிறைந்த கன்னங்களுடன், நாயனக்காரனின், அந்தப் பொட்டைக் கண் முகம், எரிச்சலை இன்னும் வளர்த்தது.

இன்னும், 'பீ...ப்பீ...பீ...பீ

'படவா ராஸ்கல். நாயனமா வாசிக்கிறே?' தலையாரி முத்தன் ரொம்ப முரடு. அவரது அதட்டலை, பாடை தூக்கிக் கொண்டு முன்னால் போய்க் கொண்டிருந்தவர்கள் கூடத் தயக்கத்தோடு திரும்பி நின்று செவிமடுத்தனர்.

அவ்வளவுதான்!

தலையாரி, நாயனக்காரன் பிடரியில், இமைக்கும் நேரத்தில் ஒரு மொத்து. ஆற்றில் துணி துவைப்பது மாதிரி ஒரு சத்தம். நாயனத்தை அப்படியே இழுத்துப் பறித்து கால்முட்டின் மேல் வைத்து. இரண்டு கைகளாலும், 'சடக்'. இரண்டு துண்டு! புது வெள்ளமாகச் சலசலத்து ஓடி கொண்டிருந்த ஆற்றின் இருட்டில் நாயனத்துண்டுகள் போய் விழுந்தன.

'ஓடிக்கோ பய மவனே, நாயனமா வாசிக்க வந்தே? நின்னா, உன்னையும் முறிச்சு ஆத்திலெ வீசியெறிஞ்சுடுவேன்.'





ஊர்வலம் தயங்கிக் கொஞ்சம் நின்றது. எல்லார் முகத்திலும், 'முத்தண்ணே நீ செஞ்ச காரியத்துக்கு உனக்குத் தங்கக் காப்பு அடிச்சுப் போட்டாலும் தகும்' என்ற திருப்தி பளிச்சிட்டது.

'என்ன நின்னுட்டீங்க? அட, போங்கப்பா, தோ மயானம் வந்தாச்சே. நல்ல நாயனக்காரனெ கொண்ணாந்திங்க.

இதைக் கேட்க நாயனக்காரனும் தவுல்காரனும் வரப்பு வெளியில் இல்லை. ஆற்றின் இடப்பக்கச் சந்தின் இருட்டில் இறங்கித் தெற்குப் பார்த்த பாதை வழியாக, இரண்டு பேரும் 'செத்தோம் பிழைச்சோம்' என்று விழுந்து எழுந்து ஓடிக் கொண்டிருந்தனர்!

விடாப்பிடியாகக் கழுத்தை அழுத்திய சனியன் விட்டுத் தொலைந்த நிம்மதியில் ஊர்வலம் சுடுகாட்டை நெருங்கிக் கொண்டிருந்தது.

* * *



Scanned with CamScanner

## பாய்ச்சல்

சா. கந்தசாமி

தெருமுனையில் ஏதோ சப்தம். ஆளோடித் தூணைப் பிடித்துச் சுற்றிக் கொண்டிருந்த அழகு தலையை நீட்டிப் பார்த்தான். இவனையொத்த சிறுவர்கள் புழுதி பறக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். என்னவோ நடக்கிறது என்று நினைத்துச் சாலைக்கு வந்தான். தெருவின் முனையில் பெரிய கூட்டம். மேளம் கடகடவென்று இரைந்து கொண்டிருந்தது. ஊருக்கு இவன் புதிதாகையால் என்ன நடக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை.

சாலையின் ஓரத்தில் கிடந்த உயரமான கருங்கல் மீதேறிப் பார்த்தான். ஒரு சின்னப் பையன் பூவரசு மரத்தில் ஏறி முன்னே சென்றான்.

அழகு கல்லை விட்டுக் கீழே இறங்கி வந்தான்.

'அழகு'

கூட்டத்தைப் பார்த்தபடியே, 'என்னம்மா?' என்று கேட்டான்.

'இல்லம்மா'

அழகு வேகமாக வீட்டிற்குள் சென்றான். கொடியில் கிடந்த சட்டையை அவசர அவசரமாக எடுத்து மாட்டிக்கொண்டே வெளியே வந்தான். பொத்தான்களைப் போட்டபடியே சாலையைப் பார்த்தான். கூட்டம் இன்னும் இன்னுமென்று கூடிக்கொண்டு இருந்தது.





ஓரடி எடுத்து முன்னே வைத்தவன் திரும்பிப் பார்த்தான். அம்மா யாரிடமோ சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். அம்மா கவனிக்கவில்லை என்பது நிச்சயமானதும் இவன் கூட்டத்தை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தான். ஆனால் முடியவில்லை. குறுக்கும் நெடுக்குமாக யார் யாரோ வந்து கொண்டிருந்தார்கள். இடித்தும் மோதியும் சென்று கூட்டத்தில் கலந்தான். கூட்டம் கூட்டமாக இருப்பது போலத் தோன்றியது. சுவர் வைத்தாற்போலக் கால்கள் என்ன நடக்கிறது? என்பது தெரியவில்லை.

நாதசுரமும் மேளமும் ஒன்றாக இழைந்து ஒலித்தன. இவன் குனிந்து பார்த்தான். இரண்டு கால்கள் மின்னல் வெட்டி மறைவது போலத் துள்ளிப் பாய்ந்து சென்றன. அந்தக் கால்கள் மனிதக் கால்களிலிருந்து மாறுபட்டு பச்சையா நீலமா என்று தீர்மானிக்க முடியாத நிறத்திலிருப்பதை இவன் கண்டான். மீண்டும் அந்தக் கால்கள் வருமென்று குனிந்தபடியே இருந்தான். நேரம் மெல்லச் சென்றது. காலும் முதுகும் இவனுக்கு வலிக்க ஆரம்பித்தன. ஆனால் விசித்திரமான அந்தக் கால்கள் மறுபடியும் தென்படவில்லை.

அழகு நிமிர்ந்து பின்னுக்கு வந்தான். மேளம் தாளக்கட்டோடு ஒலித்தது. சதங்கை குலுங்கியது. இரண்டையும் மீறிய ஒரு சப்தம். இவனுக்குச் செவிப்பறையே கிழித்து விடும்போல் இருந்தது. நெஞ்சில் கை வைத்துக்கொண்டு மேலே நிமிர்ந்து பார்த்தான்.

ஆள் உயரக் குரங்கு ஒன்று மரத்தின் மேலிருந்து கீழே இறங்குவது தெரிந்தது. தான் கண்டதை இவனால் நம்ப முடியவில்லை. கண்ணுக்குத் தெரிந்தது நிஜமா என்கிற தவிப்பு.

குரங்கை இவன் சின்ன வயசிலிருந்து பார்த்து வருகிறான். இணையாக இரண்டு குரங்குகள் வீட்டுப் பக்கம் வரும். தென்னை



Scanned with CamScanner

மட்டையைப் பற்றிக் கொண்டு இந்த மரத்திலிருந்து அந்த மரத்திற்குத் தாவும்; வீட்டு மேலேறி ஓடு பிரிக்கும். விரட்டினால் சீறும். அதுதான் குரங்கு. இப்போது தான் கண்டது குரங்கல்ல, இது.

அனுமார் நினைவு இவனுக்கு வந்தது. இது அனுமார்தான். வாலில் பந்தத்தைக் கட்டிக் கொண்டு பத்துத்தலை ராவணன் லங்கையைக் கொளுத்திய அனுமார்தான். மனத்தில் அனுமாரைக் காணும் ஆவல் பெருக முண்டியடித்துக் கொண்டு கூட்டத்திற்குள் நுழைந்தான். ஒருவன் இவனை புறங்கையால் இடித்துத் தள்ளினான். அழகு அதை லட்சியம் பண்ணாமல் உடம்பை இடுக்கில் நுழைத்து முன்னே சென்றான்.

'யாரு நிண்டறது' என்றொருவன் இவன் கையைப் பிடித்து முன்னே விட்டான்.

அழகு சந்தோஷமுற்று – அவனைப் பார்த்துச் சிரித்து அனுமாரைத் தேடினான். அனுமார் மரத்திலிருந்து கீழே குதித்து இரண்டு கால்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்துக் கைகளை ஓர் நேர்க்கோட்டில் நீட்டியிருந்தார். நீண்ட வால் புழுதியில் கிடந்தது. கூட்டத்தின் பார்வை அனுமார் மீதிருந்தது.

திறந்திருந்த கண்களை அனுமார் மெல்ல மூடினார். நீட்டியிருந்த கைகளைக் குவித்து வானத்தைப் பார்த்தபடி, 'ராமா' என வணங்கினார். பிற சப்தங்கள் மங்க அனுமார் குரல் மட்டுமே தனியாக ஒலித்தது.

'ராமா, ராமா' கூட்டம் அனுமாரோடு சேர்ந்து கோஷித்தது. அனுமார் வலது காலையும் இடது காலையும் மாறி மாறித் தரையில் உதைத்து வேகமாகக் கைகளை வீசி நடக்க ஆரம்பித்தார்.

இவனும் கூட்டத்தோடு பின்னால் நடந்தான்.





கொஞ்சதூரம் சென்றதும் அனுமார் ஒரு கடையில் தொங்கிய வாழைத்தாரிலிருந்து பழங்களைப் பறித்து எட்டியவர்களுக்கெல்லாம் கொடுத்தார். இவனுக்கும் அதிலொன்று கிடைத்தது. பழத்தைப் பையில் வைத்துக் கொள்வதா என்பதை இவனால் தீர்மானிக்க முடியவில்லை. யோசித்துக் கொண்டிருக்கையில் கூட்டம் கூட்டமாக மாறியது. இவன் பின்னால் கொஞ்சம் நகர்ந்து மேளக்காரன் பக்கத்தில் நின்றான்.

அனுமார் வட்டத்தின் மையத்தில் நின்று அப்படியும் இப்படியும் பார்த்தார். ஒருவன் வட்டத்தைப் பெரிதாக்கக் கூட்டத்தைப் பின்னுக்கு நகர்த்தினான். எல்லோரும் மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்தார்கள். இன்னும் இன்னுமென்று தள்ளினான். அந்த இடமே போதும் என்பது போல அனுமார் தலையசைத்தார். சதங்கை குலுங்க ஓட்டமென்றும் நடையென்றும் இல்லாமல் ஒரு சுற்றுச்சுற்றி - திடீரென்று கைகளைத் தரையில் ஊன்றி எம்பிக் குதித்தார். சதங்கையும் மேளமும் நாதரமும் ஒன்றாக இழைந்தன. அனுமார் தாவிக் குதித்து குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்து சென்றார். நீண்ட வால் மேலே சுழன்று சரேலென்று தரையில் படர்ந்து புழுதியைக் கிளப்பியது.

சப்தத்தையும் ஆட்டத்தையும் தாங்கிக் கொண்டு இவனால் நிற்க இயலவில்லை. உடம்பே தன் வசமிழந்து போவது போலிருந்தது. கைகளை மார்போடு இறுக அணைத்துக் கொண்டான். தானே அனுமாராக மாறுவது போல இவனுக்குத் தோன்றியது. கால்களைத் தரையில் அழுத்தி ஊன்றி அனுமாரைப் பார்த்தான்.

அனுமார் கீச் கீச் என்று கத்திக் கொண்டே பந்தல் காலைப் பற்றி மேலே சென்றார். வால் இவனை உரசிச் சென்றது. அதைப் பிடிக்கக் கையைத் தூக்கினான். அனுமார் வேகமாக



Scanned with CamScanner

இவன் அடுத்தவனைப் பார்த்தான். அவன் இவனைப் பார்த்து மெல்லச் சிரித்தான். அழகு அவன் அருகில் சென்றான். வெகு நேரமாக வால் சுமந்து வருவது அவனுக்குக் கஷ்டமாக இருந்தது போலும். அருகில் அழகு சென்றதும் வாலைக் கொடுத்து விட்டுக் கைகளை நன்றாக உதறியவாறு. 'ஒம் பேரு' என்றான்.

'அழகு'

'கூட வரேல்ல'

இவன் தலையசைத்தான்.

'செத்த வச்சுக்க; வந்துடறேன்'

இவன் கைகள் மொசு மொசுப்பான வாலைத் தடவிவிட்டன.

'வாரேண்ணே' மேளக்காரன் அனுமாரைப் பார்த்துச் சொன்னான்.'

'வாங்க'

'நானும் வாரேண்ணே' என்றான் நாதசுரக்காரன்.

'வாங்க'

அவர்கள் தெற்காகத் திரும்பிச் சென்றார்கள். கூட இருந்த இரண்டு மூன்று பையன்களும் அவர்களோடு நடக்க ஆரம்பித்தார்கள். அனுமார் தெருவையே பார்த்தபடி இருந்தார். ராமு கீழே விழுந்த மணியைப் பொறுக்கி எடுத்துப் பையில் வைத்துக் கொண்டான்.

மரத்தில் சாய்ந்து நின்றிருந்த அனுமார் நடக்க ஆரம்பித்தார். ராமு புழுதியில் புரண்ட வாலை அவசரம் இல்லாமல் வந்து மெல்லத் தூக்கினான். சுமை தாங்கிக்கல் மீது உட்கார்ந்திருந்த அழகு அனுமார் போவதைப் பார்த்து வேகமாகக் கீழே குதித்து வந்து வாலை எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டான்.





அனுமார் மெதுவாக நடந்து சந்தை மேட்டைத் தாண்டி ஆற்றங்கரைக்கு வந்தார். ஆறு நிறையத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. புதுத் தண்ணீர். அனுமார் ஒன்றையும் கவனிக்காமல் பாலத்தின் வழியே மெல்ல நடந்து அக்கரைக்குச் சென்றார்.

ஆற்றங்கரையையொட்டிச் சின்னக் கோவில்; என்ன கோவில் என்று இவனுக்குத் தெரியவில்லை. கோவில் தூணில் சாய்ந்துகொண்டு அனுமார் உட்கார்ந்தார். இவன் ராமுவோடு வாலைக் கீழே போட்டுவிட்டு, கையை மாறி மாறி உதறிக் கொண்டான். அனுமார் கால்களை நீட்டி நன்றாகத் தூணில் சாய்ந்து பெரிதாகக் கொட்டாவி விட்டார்.

தான் என்ன செய்வதென்று சுற்றும் முற்றும் அழகு பார்த்தான். ஆறு, கரும்புத்தோட்டம், கோவில் – இவன் பார்வை மீண்டும் அனுமார்மீது படிந்தது.

அனுமார் நிமிர்ந்து உட்கார்ந்து வாலைப் பிடுங்கிப் போட்டார். அப்புறம் வாய், இடுப்பு, வேட்டி, மார்புக்கச்சை, ராமர் படம், கால், சதங்கை, கைச் சதங்கை – ஒவ்வொன்றையும் எரிச்சலோடு வீசியெறிவது போல இவனுக்குத் தோன்றியது.

அனுமாருக்கு என்ன ஆகிவிட்டது என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.

பளுவை எல்லாம் இழந்த சுகத்தில் அனுமார் கையையும் காலையும் உதறிக் கொண்டு பீடியை எடுத்துப் பற்ற வைத்துப் புகையை நன்றாக இழுத்தார். கண்களை மூடி மேலே பார்த்தபடி புகையை ஊதுகையில் இருமல் வந்தது. விட்டுவிட்டு இருமிக் காறி உமிழ்ந்தார்.

இவன் அனுமாரையே பார்த்துக் கொண்டிருந்தான். அசுர பலத்தோடு சாகசங்கள் புரிந்த அனுமார் பீடி அடித்துச்



Scanned with CamScanner

சேர்ந்துபோய் இருமுகிறார். இவனுக்கு அழுகை வருவது போல் இருந்தது.

'எலெ, ராமு'

அவன் முன்னே சென்றான்.

'ஒம்மாள குளிக்கத் தண்ணி போடச் சொல்லு'

'சரிங்க மாமா'

'பணம் பத்தரமா இருக்கா'

'இருக்குங்க மாமா'

'சரி, வூட்டுக்கு நீ முன்னால போ'

அனுமார் இன்னொரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக்கொண்டு இவனைப் பார்த்தார். இவன் அனுமாரைப் பார்த்துச் சிரித்தான். கிட்ட வரச்சொல்லி சைகை காட்டினார். மெதுவாக அருகே சென்றான். கையைப் பற்றிக் கொண்டு, 'ஆட்டமெல்லாம் பாத்தியா?' என்றார்.

'பாத்தேங்க; ரொம்ப ஜோருங்க'

'உம்' சின்ன இருமல்

'நீங்க எகிறி குதிச்சப்ப, ஜனங்க பயந்துட்டாங்க'

'அப்படீயா' என்றார் அனுமார்.

'வால்ல நெருப்பு வச்சுக்கிட்டப்ப ஊரே எரியப் போவுதுன்னு நெனச்சேன்'.

அனுமார் கையைத் தரையில் அடித்துப் பெரிதாகச் சிரித்தார். சிரிப்பு மாறியது. இரும இரும கண்களில் நீர் முட்டியது.

'இரும வந்தா — இதான்' தனக்குத்தானே சலித்துக் கொண்டார்.





'எனக்குக்கூட ஒங்கள மாதிரி ஆடனுமுன்னு ரொம்ப ஆசைங்க'

'உம்... அப்படியா... எங்க, ஒரு சின்னம் ஆட்டம் ஆடிக்காட்டு. ஒனக்கு வருமான்னு பாக்கறேன்'

எழுந்து தரையில் கிடந்த வாலை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு சதங்கையை எடுத்தான். அனுமார் எழுந்து நின்று பெரிதாக இவனுக்குப் பயம் உண்டாகும் வரையில் சிரித்தார். கையிலிருந்த சதங்கை கீழே நழுவ அச்சத்தோடு அனுமாரைப் பார்த்தான்.

அனுமார் தூணில் சாய்ந்து, 'பரவாயில்ல; கட்டிக்கிட்டே ஆடு' என்றார்.

காலில் சதங்கையைச் சுற்றிக் கொண்டு அனுமார் மூஞ்சியை எடுத்து மாட்டிக் கொண்டு — தான் கண்டதையெல்லாம் மறுபடியும் மனத்தில் இருத்தி ஆட்டத்தை ஆட ஆரம்பித்தான். முதலில் மரத்திலிருந்து கீழே குதிக்கும் ஆட்டத்தை ஆடினான். இவன் ஆட்டம் தாளகதிக்கு ரொம்பவும் இணங்கி வருவது அனுமாருக்கு மகிழ்ச்சியளித்தது. உம்-உம் என்று தலையசைத்தார். ஆனால் நேரம் ஆக ஆக அடி தப்பியது. தன் போக்கில் ஆடினான்.

அனுமார் முகத்தைச் சுளித்தார். இவன் ஆட்டம் பொறுக்க முடியாததாகப்பட்டது.

'இங்க பாரு'. அனுமார் தாவிக் குதித்து முன்னே வந்து மெல்ல அடிபோட்டு ஆடத் தொடங்கினார். லேசாக ஆரம்பமான ஆட்டம் சில நொடிகளிலேயே துரிதகதியில் இறங்கியது. இவன் கண்ணிமைக்காமல் ஆட்டத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

துள்ளியும் பாய்ந்தும் பெருங்குரலில் ஊர் நடுங்கக் கூச்சலிட்டும் ஆடிய அனுமார் வெற்று வெளியில் ஒரு சின்னப்



Scanned with CamScanner

பையன் முன்னே ஆடுவதைத் திடீரென்று உணர்ந்து வெட்கமுற்றவர் போல ஆட்டத்தை நிறுத்திவிட்டு, 'என்ன, பார்த்துக்கிட்டீயா? என்று கேட்டார்.

பேச்சின் தொனி மாறியிருப்பதைக் கண்ட அழகு தலையசைத்தான்.

'எங்க, இப்ப ஆடு பாக்கலாம்'.

அழகு ரொம்ப நிதானமாக ஆடினான்.

அனுமார் தன்னை மீறிய சந்தோஷத்தோடு 'பேஷ், பேஷ் – உடனே பிடுச்சுக்கிட்டீயே' என்றார்.

'வால்ல பந்தம் கட்டி ஆடுற ஆட்டம் ஆடு'

அழகு பின்னால் சென்று வாலை இழுத்து இடுப்பில் சுற்றியபடி அனுமாரைப் பார்த்தான். அவர் தூணில் சாய்ந்து கால்களை நன்றாக நீட்டிக் கொண்டிருந்தார். இவன் சாய வேட்டியை வாலின் நுனியில் சுற்றி நெருப்பு வைத்தான். சாய வேட்டி கருகி அணைந்தது. வாயால் ஊதி நெருப்பைக் கனிய வைத்து பெரிதாகக் கத்திக் கொண்டு அனுமாரை நோக்கிப் பாய்ந்தான்.

கண்களை மூடி வாயால் மூச்சுவிட்டுக் கொண்டிருந்த அனுமார் திடுக்கிட்டதுபோல கண் விழித்தார். அழகு கைகளை முன்னே நீட்டிச் சிரித்தான். இவன் சிரிப்பு அவருக்கு எரிச்சல் ஊட்டியது.

'உம், ஆடுலே'

மாறாத புன்னகையோடு துள்ளித் துள்ளி கையும் காலும் குழைந்து நெளிய ஆடினான். அனுமார் அவனை உற்றுப் பார்த்தார். மனம் தன்னிலை இழந்தது. கையைத் தரையில் ஓங்கியடித்தார். அழகு முன்னே பாய்ந்து பின்னால் காற்றில் மிதப்பதுபோலச் சென்றான்.





அனுமாரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து அம்புபோல முன்னால் பாய்ந்தார். இவன் ஒரு கணம் நிதானித்து, விரிந்த அனுமார் கை இடுக்கில் புகுந்து வெளியே சென்றான். பாய்ந்த வேகத்தில் கீழே விழுப்போன அனுமார் தரையில் கையூன்றிச் சமாளித்து நின்று வெறுமை நிறைந்த மனதோடு இவனைத் திரும்பிப் பார்த்தார்.

அழகு பற்களெல்லாம் வெளியே தெரியச் சப்தமாகச் சிரித்துக் கைகளை ஆட்டி எம்பி எம்பிக் காற்றில் மிதப்பது போல் முன்னே வந்தான்.

அனுமார் அவனையே பார்த்துக் கொண்டிருந்தார். அருகில் வந்த அவன் தலையை ஒயிலாக ஒரு வெட்டு வெட்டி பின்னுக்குச் சென்றான்.

'என்னாடாலே, எனக்கா பாச்சக் காட்டு' அனுமார் கத்திக் கொண்டே அவனைப் பிடிக்கப் பாய்ந்தார். அவன் குனிந்து பிடியில் சிக்காமல் நழுவ – அனுமார் கால்கள் பின்னிக் கொள்ளத் தரையில் விழுந்தார்.

அழகு, அனுமார் விழுந்ததைக் கவனிக்காமல், தன் ஆட்டத்தில் மூழ்கியவனாகக் களிப்பும் உற்சாகமும் பொங்க வேகமாக ஆடிக்கொண்டிருந்தான்.

* * *



Scanned with CamScanner